வள்ளலார் ஒற்றியிலே ஒருநாள்

புதுக்கோட்டை சீனிவாசன்



2214

வள்ளலார்

ஒற்றியிலே ஒரு நாள்

ஆக்கியோன் :

இசைமணி : புதுக்கோட்டை சீனிவாசன்

வெளியிட்டோர் :

ன்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்

7/99. அம்மன் கோவில் தெரு

சென்னை—1

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எத்தனைபேர் நின் வரவை யெண்ணி எண்ணி—யேங்குகின்ரு
ரெத்தனை நாட் சென்றிடுமோ விங்குவர—லத்தருண
மித்தேகத் தோடிங்கிருத்து வையோ வென்குருவே
யெத்தேகத் தென்ருே வியம்பு. —பிரபந்தத்திரட்டு

காணிக்கை !

வள்ளலார் திருவாய் மலர்ந்த தேன் ஒழுகும் திரு அருட்பாவை; அவனி எங்கும் பரப்பும் பணியே தன்பணியெனக் கொண்டிருந்த முதுபெரும் சன்மார்க்க மும்மணிகளாகிய,

காரணப்பட்டு கந்தசாமி பிள்ளை அவர்கட்கும்,
தீ. நா. முத்தைய செட்டியார் அவர்கட்கும்,
சென்னை மா. இராசமாணிக்கனர் அவர்கட்கும்.

இந்த அன்பு மலர் ஒரு காணிக்கையாகட்டும்.

தங்கள்,
சன்மார்க்க ஊழியன்.

2214

அணிந்துரை

ஒற்றியிலே ஒரு நாள்

மணிக் குரல் சீனி—ஒற்றியிலே பல நாள் இருந்து "ஒற்றியிலே ஒரு நாள்" எழுதியிருக்கிறர்—ஒற்றியிலே பெற்ற ஒளியே ஞான நெற்றியிலே விளையாடியது. அருட் குயிலான வள்ளலார் உள்ளம்அக வியல் இன்னிசைப் பாடல்களில் கற்றோர் வியக்கும் கற்பகக் கனிகள் ஒற்றியூரில் கனிந்தன, தில்லை நடராசர் உயிர், ஒற்றி தியாகர் ஒற்று, உடல்—உயிரும் ஒற்றும் கூடி உலகம் உயரும் தேனருவிப் பாடல்களை நமக்கு அருளின. "ஊரென்று உடையீர் ஒற்றிதனை ; உலக முடையீர்." என்று பாடுகிறர் வள்ளலார். வள்ளலாரின் சன்மார்க்கப் புரட்சி ஒற்றியூரில் முதல் முரசு கொட்டி வடலூரில் வெற்றி முரசார்த்தது.

ஒற்றியூரில் வள்ளலார் அருளிய மணிவாக்குகளைப் பதித்து இந்நூலை நமது இசைமணி உருவாக்கி யுள்ளார். இசைமணி சீனிவாசன் பேசக் கேட்டேன். பாடக் கேட்டேன். அவர் பாட்டு உள்ளத்தைத் தொடுகிறது. இவர் பேச்சு இனிய விருந்தாக இருக்கிறது. தமிழ் நாடு ஈன்ற அன்பு புலவர் இசைமணி ஒருவர். அவர் என்னுடைய பாடல்களை அரங்குகளில் முழக்குகிருர். கேட்போர் கருத்தை உணரும்படி பாடுகிருர். திண்டுக்கல்லிலும் வடலூரிலும், சென்னையோக சமாஜத்திலும், இப் புலவர் பாடக்கேட்டு இசைமணி என்ற பட்டம் அளித்தேன். இந்தப்பட்டம் அவருக்கு மிகவும் பொருந்தும். இவர் யோக சமாஜ புலவர். யோக சமாஜத்தில் வசித்துக் கொண்டு அருட் ஜோதி வள்ளலார், மாணிக்க வாசகர், அப்பர், சுந்தரர், சேக்கிழார், தாயுமானவர், பட்டினத்தார், காரைக்கால் அம்மையார், போன்ற அருட்பெரியார் வாழ்க்கைகள் இவற்றை இன்னிசையுடன் கதையாக செய்வதற்குப் பயிலும் முயற்சியில் இருக்கிருர். இவரைத் தமிழர் போற்றுவதோடு, அவர் எழுதிய இந் நூலை எல்லோரும் படியுங்கள், அருளுக்குப் படியுங்கள்.

யோக சமாஜம்
அடையாறு
சென்னை - 20.

சுத்தானந்த பாரதி

நன்றியுரை

"மனித இனமும், விலங்கினமும் ஒன்று சேர்கின்ற காலம் நெருங்கி வருகின்றது என்று ஒரு ஆங்கிலக் கவிஞன் கூறியதில் எவ்வளவோ உண்மை இருக்கத்தான் செய்கிறது.

உலக வாழ்க்கையில் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது ஒருமுறை; இப்படித்தான் வாழ வேண்டு மென்பது மற்றொரு முறை; இந்த இரண்டில் இப்படித்தான் வாழ்தல் வேண்டும் என்று வாழ்ந்து, அதைத் தன் கவிதை மூலம் சொல்வதிலேயே தனது வாழ்க்கையைச் செலவிட்ட பெருமான் வள்ளலார்.

மற்றவர்களுக்குச் சொல்வதோடு நின்று விடவில்லை அந்த தூய ஞானி! தானும் அந்த வழியில் நின்று "என்னை வணங்க வேண்டாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனை வணங்குங்கள்" என்று தடுத்துரைத்த தவ ஞானி தமிழ் நாட்டில் வள்ளலார் ஒருவர்தான்.

அவர் பாடிச் சென்ற அருட்பாவை நமது சிற்றறிவைக் கொண்டு எழுதி விட முடியாது, என்றாலும் உள்ளறிவைக் கொண்டு ஓரளவு எழுதுவது குற்றமாகாதல்லவா? அந்த முறையில்தான் நெல்லிலிருந்து உமியை நீக்கினால் அரிசி தென் படுவதைப் போல; கதையிலிருந்து கற்பனையை நீக்கினால் கருத்துத் தென்பட வேண்டும் என்று தியாகப் பெருமானை எண்ணியே இதை எழுதினேன்.

இந்நூல் வெளியிட என்பால் அன்பு காட்டிய சன்மார்க்க சீலர்களாகிய முன்னாள் நீதிபதி C. நாராயணசாமி முதலியார் B.A B.L., அவர்கட்கும், இராயபுரம் A. ஜெகபதி நாயுடு அவர்கட்கும், புதுக்கோட்டை S. K. R. கருப்பண் செட்டியார் அவர்கட்கும், சிந்தாதிரிப்பேட்டை K. சுந்தரமூர்த்தி நாயக்கர்

அவர்கட்கும், திருவொற்றியூர் சன்மார்க்க சங்கச் செயலாளர் திரு. A. கேசவப் பிள்ளை அவர்கட்கும் எனது நெஞ்சங்கலந்த வணக்கமும், நன்றியும் என்றும் உரியது

முன்னுரை வழங்கிய தனிப்பெரும் கவிஞர், முதுபெரும் புலவர் சுத்தானந்த பாரதியார் அவர்களை நான் எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை.

நல்ல முறையில் அச்சியயற்றி, வெளியிட முன் வந்த அருட்பெருஞ்சோதி அச்சகத்தாரை பாராட்டாமல் இருக்க முடியுமா என்ன? அவர்களுக்கும் என் அன்பு கனிந்த வணக்கம்.

31—1—61
திருவொற்றியூர்
சென்னை — 19

தங்கள்
சன்மார்க்க ஊழியன்
ஆர். சீனிவாசன்.

உ
அருட்பெருஞ்ஜோதி

எனது குருநாதரின் உண்மைகள்

[தலைமாணாக்கர் தொழுவூர் வேலாயுதனார்]

தென் இந்தியாவில் பிரசித்திப் பெற்ற யோகி திரு அருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் சீடர்களில் நான் ஒருவன்.

முதலில் எமது பெருமானைப் பற்றியும், அவரது போதனைகளைப் பற்றியும், சுருக்கமாகச் சொல்லுகின்றேன்.

இவர், சென்னை இராஜதானியில், தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் தாலூகா, திருமருதூர் என்னும் கிராமத்தில் அவதரித்தவர். இவர் தம் இளம் பிராயத்திலேயே சென்னைக்கு வந்து அங்கு வெகு காலம் வசித்திருந்தார்.

இவர் தம் ஒன்பதாம் வயதிலேயே, ஆரியர்களாலும், திராவிடர்களாலும் சரிசமானமாய் அபிமானித்தவர்.

அகத்தியர் முதலிய முனிவர்களால் எழுதப்பட்ட பாக்களை ஓதாமலே மனப் பாடமாய்ப் பாடும் நாவளத்தைப் பெற்றிருந்ததாகவும் சொல்லக் கேள்வி.

நான் 1849-ம் வருடம் இவரது சீடனானேன். இவர் எவ்விடமிருந்து, எவரால், ஞானதீட்சை பெற்ருர் என்பது எவருக்கும் தெரியமாட்டாது என்ருலும், சில வருடங்களானதும், இவரை அநேக சீடர்கள் அடுத்துச் சூழ்ந்து கொண்டிருந்தனர். இவர் சிறந்த ஒரு ஏம சித்தர். இவருக்கு மாமிசம் உண்பர்களை மாற்றும் அற்புத சித்தி இருந்த தென்பது அநேகருக்குக் கண் கூடாம்.

இவருடைய பார்வை ஒன்றே, மாமிச உணவின் விருப்பத்தை யொழிக்கப் போதுமானதாய் இருந்தது.

இவர் பிறருடைய மனதில் நிகழுபவைகளைப் பார்க்க வல்லவர்.

இவர் 1855-ம் ஆண்டில் சென்னையை விட்டுச் சிதம்பரத்திற்குப் போனர். அங்கிருந்து வடலூர், கருங்குழி என்ற இடங்களுக்குச் சென்று, அங்கு நீண்டகாலமிருந்தனர்.

அங்கிருக்கும்போது, இவர் அடிக்கடி தம் சீடர்கள் அறியாவண்ணம் மறைந்திருப்ப துண்டு. இவர் எங்குச் சென்ருரென்பதை அறிவோர் எவருமிலர். இப்படி வெகுநாள் மறைந்திருப்பார்.

இவர் உருவத்தில் சாதாரணமான உயர முள்ளவர். மெலிந்த சரீர முடையவர். எலும்புகள் தெரியும். ஆயினும் வீரியபலமுள்ளவர். நிமிர்ந்த தேகம் தெளிந்த மாநிற மேனியர். நீண்ட மெல்லிய நாசியுடையவர். பரந்த பொரி பறக்குங் கண்களை யுடையவர். இவருடைய முகத்தில் சதா சற்று விசனக்குறிக் காணப்பட்டிருந்தது.

இவர் கடைசி காலத்தில் முடியை நீளமாய் விட்டிருந்தார்.

இவர் யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய பாத ரட்சையைத் (ஆற்காட்டு சோடு) தரித்திருந்தார்.

இவருடைய உடை, இரண்டு வெள்ளை யாடையை விட வேறில்லை. ஒரே ஆடையை உடுத்திருந்ததாகவும் கேள்வி. இவர் கடும் நிராகாரத் தவசிபோலிருந்தார். இவர் இளைப்பாறினதாக எவரும் அறியமாட்டார். இரண்டு அல்லது மூன்று நாளைக்கொருமுறை யுண்பார். அப்போதும் சில கவளத்தோடு திருப்தியடைவர். இரண்டு மூன்று மாதகாலம் வரை உபவாச விரதம் எடுப்பர்; அப்போது கொஞ்சம் சர்க்கரை கலந்த பானத்தைத் தவிர வேறொன்றும் உட்கொள்ளார்.

இவர், சாதிவேற்றுமை பாராட்டலாகாது என்று போதித்ததால், ஜனங்கள் அதில் பிரியப்பட்டவர்களிலர். எனினும், பல ஜாதியாரும், இவரைச் சுற்றிப் பெருங் கூட்டமாய்க் கூடினர். அவர்கள் இவருடைய போதனைக் காக வந்திலர்கள். ஆயினும் இவர் அற்புத சித்திகளைப் பெற்றவர் என்று கேள்வியுற்று, அவ்வற்புதங்களைப் பார்க்க வந்தவர்களாவர். இவர் அவர்களுக்கும் அவ்வித மானது ஒன்றும் இல்லை யென்றும், எமது கொள்கை சுத்தமான சமயம் "சமரச சுத்த சன்மார்க்கம்" என்று அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவார்.

1867-ம் ஆண்டில், இவர் "சமரச சுத்த சன்மார்க்க சங்கம்" என்னும் ஓர் இயக்கத்தை உண்டாக்கினர். அகிலமாம் சகோதரத்துவ மூலக் கருத்தை உலகில் நிலை நாட்டி வேதத்தின் சத்திய போதனைகளைப் பரவச் செய்யும் சங்கம் என்பது அதன் கருத்து. இது தியாசாபி

(தத்துவஞான) சங்கத்தின் கருத்தோடு ஒத்திருக்கின்றது ; என்று நான் சொல்ல வேண்டியது அவசியமில்லை.

எமது 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' ஐந்தாறு வருடந்தான் அங்கு இருந்தது. பிறகு உலக முழுவதும் பரவிக்கொண்டே யிருக்கிறது. அதுபோது அநேக ஏழைகளுக்கும், தேகம் தளர்நத பலவீனர்களுக்கும் அன்னமும், உடையும் அளிக்கப்பட்டு வந்தது.

இவர் ஐம்பத்தொரு வயதை யடைந்தபோது தாம், உலகை விட்டுப் போவதாகச் சொல்லி சீடர்களுடைய மனத்தை ஒருவகை ஆறுதலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தார். சமாதியிலிருக்கப்போவதாகத் தமது விருப்பத்தைக் காட்டினார். இவர் 1873–ம் ஆண்டில் ஆறுமாத காலமாக மன்பதை யுலகுக்குள் சகோதர ஒற்றுமையைப் பற்றி வெகு விமரிசையாகப் போதித்தார்.

பின்னர் அவ்வாண்டுக் கடைசியில், மூன்றுமாதமாய்ப் பிரசங்கம் செய்வதை நிறுத்திவிட்டு மௌனமாயிருந்தார்.

1874–ம் ஆண்டில் ஜனவரி மாதக் கடைசியில் பேசத் தொடங்கி இனி நடக்கப்போகும் விஷயங்களை எச்சரிக்கையாகக் கொடுத்தார்.

பிறகு இவர், தமது சீடர்களுக்கு அன்பு நிறைந்த ஆசிகளைக் கூறி, தாம் இருந்த அக்குடிசைக்குள் விரித்திருந்த படுக்கையில் ஸ்ரீமுகவூ தைமீ 19உ புனர் பூசமும் பூசமும் கூடிய நன்னாளில் (1874) ல் சாய்ந்து கொண்டார்.

இவருடைய உத்திரவின்படி அதன் கதவு பூட்டப்பட்டது. பின்னர், ஒரு வருடத்திற்குப் பிறகு அரசாங்

கத்தார் கதவைத் திறந்து பரிசோதித்ததில் அவ்வறை வெறும் அறையாயிருந்தது. அவர் மறையுங்கால், மறு படியும் தாம் வருவதாகச் சொன்னூரே தவிர, வருங்காலம், சந்தர்ப்பம் என்பவைகளைக் குறித்து ஒன்றும் தெரிவிக்க வில்லை. அதுவரையில் தாம் இந்தியாவில் மாத்திர மல்லாமல் ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய நாடுகளி லும் உலக முன்னேற்றத்தைக் குறித்து வேலை செய்யப் போவதாய்த் தெரிவித்தார்.

இது ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கும் தெரிந்த தேயாம், இது இவருடைய சரித்திரத்தின் மிகச்சுருக்க மாம்.

இனி இவர், இந்து சரித்திரங்களிலுள்ள நல் லொழுக்கக் கருத்துக்களைப் பிரசிங்கிப்பதிலும் அகில மாம் சகோதர ஐக்கிய ஒற்றுமை, இரக்கம், தயவு முதலியவைகளின் கருத்தை, ஜனங்களின் மனதில் தைக்கும்படிச் செய்வதிலும் ஊக்கமாய் இருந்தார், என்ருலும் இவர் கொடுத்த உன்னத நல்லொழுக்கங்களை மதித்து, அபிமானித்தவர்கள் வெகு சிலரே யாவர். இதைப்பற்றிக் கடைசி காலத்தில் விசனமுற்று அடிக்கடி இவர் சொன்னதாவது :—

நான் கொடுத்த போதனைகளை இந்துக்கள் செவி யுற்றுக் கேளாதபோதிலும், வேதாகமங்களில் அமிழ்ந்து கிடக்கும் அந்தரங்க கருத்துக்களைப் பத்திரமாய் வைத் திருக்கும் மகாத்மாக்கள் அந்நிய நாட்டாருக்கு வெளிப் படுத்துவார்கள். அந்நிய நாட்டார் அவைகளை சந்தோ ஷத்துடன் ஏற்றுக்கொள்வார்கள்.

தற்போது உலகில் மேலிட்டிருக்கும் கலி புருடனின் விபத்துக்கேதுவான செல்வாக்கு, இனி பத்து வருடத் திற்குள் (கலி 5000த்துடன்) அடங்கிப்போகும்.

மாமிசம் உண்ணும் வழக்கம் நாளாவட்டத்தில் விட்டுப்போகும்.

ஜாதி வம்ச முதலியவைகளால் ஏற்படும் வேற்றுமை யானது அடைவினில் நீங்கிப் போய், அகிலமாம் சகோ தரத்துவத்தின் மூலக் கருத்தின் சாரத்தை ஒத்துக் கொண்டு; இந்தியாவில் "சகோதர அறம்" நிலை நாட்டப்பெறும்.

உண்மையில் "கடவுள்" எனப்படுவது "அகிலமாம் அன்பாம்" அஃது உலகில் உள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும், சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது.

ஒவ்வொருவருக்குள்ளும் அடங்கி இருக்கும் தெய்வீக சக்தியை, மானிடர்கள் தெரிந்து கொண்டிருந்தும், இயற்கைச் சக்திகளை மாற்றக்கூடிய அற்புத வல்லமை களைப் பெறுவார்கள் என்பதாம்.

அகில சகோதர ஒற்றுமையைப் பாராட்டும் இச் சங்கத்தில் அங்கத்தினராக வர நீங்கள் அருகரல்லர். இச் சங்கத்தின் உண்மை அங்கத்தினர் இந்தியாவிற்கு வடக்கே வெகுதூரத்தில் வசிக்கிறார்கள்.

நீங்கள் நான் சொல்வதைக் கேட்பதில்லை; எனது போதனையின் கருத்தின்படி நடக்கவுமில்லை; நான் சொல்வதைக் கவனிக்க மாட்டோம் என்று திடப் படுத்திக் கொண்டீர்கள் போலும். என்றாலும் காலம் நெருங்கி விட்டது. ருஷியாவிலிருந்தும், அமெரிக்காவி லிருந்தும், இன்னும் இதர நாடுகளிலிருந்தும் அறிவா ளிகள் இந்தியாவிற்கு வந்து, இதே அகில சகோதர ஒற்றுமையின் கொள்கைகளைப் பிரசங்கிப்பார்கள்.

நான் இப்போது உங்களுக்கு, வீணில் சொல்லும், சிறந்த உண்மைகளை அப்போது நீங்கள் தெரிந்து கொண்டு மதித்து நடப்பீர்கள். வடக்கே வெகுதூரத்தில் வசிக்கும் 'அம்பல சகோரர்கள்' இந்தியாவில், அநேக அற்புதங்களை நிகழ்த்தி, நமது தேசத்திற்கு அளவிடக் கூடாத நன்மைகளை விளைவிப்பதை, சீக்கிரம் நீங்கள் காண்பீர்கள்" என்பதாம்.

இவர் ஞானதிருஷ்டியில் கண்டு சொன்ன விஷயங்கள் யாவும் தவருமல் நிறைவேறின.

மகாத்மாக்கள் வடக்கே இருக்கிருர்கள் என்பது இந்துக்களுக்கு நவீன கருத்தல்ல. ருஷியாவிலிருந்து "பிளாவட்ஸ்கி அம்மையார்" என்பவரும், அமெரிக்காவிலிருந்து "கர்னல் ஆல்காட்" என்பவரும் வருவதைப் பற்றிப் பல வருடங்களுக்கு முன்னரே அற்புதச் செய்தியாக வெளிப்படுத்தியதே யாகும்.

இந்த தியாசாபிகல் ஸொஸைட்டி, எவர்களுடைய ஆக்கினையின்படி ஏற்படுத்தப்பட்டதோ, அம்மகாத்மாக்களுடன், எனது குருவும் சேர்ந்தவரென்று எதிர்க்க முடியாத அத்தாட்சியாக இருக்கின்றது. இதில் பல சான்றுகளிருக்கின்றன.

இங்ஙனம்

திருவருட் பிரகாச வள்ளலார் அடிமை

தொழுவூர் வேலாயுதம்.

குறிப்பு:—சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராயிருந்த தொழுவூர் - வேலாயுத முதலியார் அவர்கள் "அந்தரங்க தியாசாபி குறிப்புகள்" என்னும் நூலாசிரியருக்கு வரைந்து கொடுத்த நற்சாட்சிப் பத்திரம்.

“வள்ளலார் ஒற்றியிலே ஒருநாள்”

தெய்வீகத் தேனருவி

தமிழக வரலாற்றில் பொன்னெளி பரப்பி நிற்கும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தோன்றிய வர் வள்ளலார்.

அவர் பாடிய தேனருவியாகி வளர் தெய்வீகத் திரு வருட்பாவில் இல்லை என்பதே இல்லை ; எல்லாம் அதில் உண்டு. ஆழ்ந்த தூக்கத்தில் உள்ள மக்கள் சமுதா யத்தைப் பாடி எழுப்ப வந்த அமர காவியம் அது!

சுருங்கக் கூறுமிடத்து மானிட நிலையைத் தாண்டி அருள் நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கின்ற அன்பு தெப்பமென்றும் கூறலாம் அதனை.

ஆண்டவனிடம் அசைக்க முடியாத அன்பும், மக்க ளிடம் இடைவிடாத இரக்கமுங் கொண்டே அந்த காவிய மாளிகையை எழுப்பினுர் அவர், அதுவே “திருவருட்பா” வாகும்!

ஒரு சோகமான உணர்ச்சியே அருட்பாவில் அடி நாதமாக அமைந்துள்ளது. அச்சோக உணர்ச்சி தான் அருட்பா வாசிப்போர் ஒவ்வொருவருடைய உள்ளத்தி லும் அன்பைப் பெருக்கி அருளினை நிலைபெறச் செய்து வருகின்றன என்பது உலகம் அறிந்த உண்மை.

அடிகளார் பாடிய அருட்பாவைப் படிக்கும் போதும், நினைக்கும் போதும் நம்மையும் அறியாது அழுது புலம்பு

கிறேம். ஏன்? அவருடைய வாழ்க்கை அப்படிப் பட்டதொரு அபூர்வ வாழ்க்கை! இன்றைய மக்கட்குத் தெரியாத பல சம்பவங்கள் நிறைந்த அதிசய வாழ்க்கை அது.

இராமலிங்க அடிகள் பாடிய அருட் கவிமணிகளில் தில்லைச் சிற்றம்பல முடையானையும் திருஒற்றியூர் தியாகப் பெருமானையுந்தான் அழகு தமிழில் அகத்துறைப் பாடல் களால் ஆயிரமாயிரமாக அவர் பாடியுள்ளார்.

ஆண்டவன் அவரை ஆட்கொள்ளுமிடம் தில்லைச் சிற்றம்பலமோ? அல்லது இந்த ஒற்றி நகரோ? என்று தெரிய வில்லையாம் அவருக்கு.

"புனித ரென்னை புணருமிடம் தெற்றி மணிக்கால் விளங்கு
தில்லைச் சிற்றம்பலமோ அன்றி இந்த ஒற்றி நகரோ?"

என்று தழதழத்த குரலில் தன் துன்பத்தை உணர்ந்து பேசுகின்றார். ஆம்! அவருடைய கடவுள் பற்று இமயமலையைவிடப் பெரியதல்லவா?

வள்ளலாருக்கு முன் எத்தனை எத்தனையோ சமயப் பெரியார்கள், இலக்கிய மேதைகள், சீர்திருத்த செம்மல் கள் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த தயாநிதி கள் தமது சிந்தனையில் எழுந்த எண்ணங்களை எல்லாம் பைந்தமிழ்ச் சோலையிலே, அருள் ஒளி வீசும் எழில் மலர் களாகப் பாடியும், பேசியும் சென்றார்கள்—செல்லுகின்ற னர்.

அவைகள் அத்தனையும் இன்னுரை என்றே உலகப் நன்கு அறிந்திருக்க; வள்ளலார் வாக்கைப் பொன்னுரை என்றே அணிந்தானும் அந்த அம்பலவாணன்.

அதுமட்டுமல்ல என்னுரைக்கு நேர் என்றும் நின் போல் உரைக்க வல்லார் யார்? என்றும் கூறியவர்;

வள்ளலாரை அருகில் அணைத்து "இனியுனை நாம் கை விடோம் ஆணை! நம் ஆணை" என்றே மை பிடித்த விழி உலகரெலாம் காண மாலையிட்டாராம் அவர்.

வள்ளலார் ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டு மென்று ஆசைப்பட்டார். ஆகையால் தான் அவர் பாடல்கள் அனைத்தும் ஆன்மநேயத்தை மையமாகக் கொண்டிருக்கின்றன!

"மக்கள் படும் துன்பத்தை மதிக்காது மேலும் மேலும் வரியைச் சுமத்துகின்ற ஆட்சி எதுவாயினும் அது சீக்கிரம் ஒழிந்தாக வேண்டு"மென வீரக்கனலை எழுப்பினர் அந்த சமதர்ம வாதி!

> "கருணையிலா ஆட்சி கடுகி யொழிக!
> அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள் நயந்த
> நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்று நினைத்து
> எல்லோரும் வாழ்க! இசைந்து".

என்று புதியதொரு புரட்சிப் பாதையை முதலில் வழி வகுத்துச் சென்றவர் அவர்தான்.

பாமாலை

வள்ளலார் தோத்திரத்தில் சாத்திரக் கருத்துக்களை வைத்து ஆண்டவனுக்கு மாலை மாலையாக அணிந்தார். அது இன்று போட்டு நாளை வாடி வதங்கிப் போகும் சாதாரணப் பூமாலையல்ல; என்றுமே வாடாது அருள் மணம் வீசும் பாமாலை அந்த மலர் மணத்தால் மக்கள் இன்பமுறவேண்டும் என்று எண்ணினர். அந்தக் கடவுள் ஞானி.

வள்ளலார் நூறு இதழ்களைக் கொண்டு கட்டிய மாலையை மகாதேவனுக்கு அணிந்தார். அதுவே மகா

தேவமாலையாகும். அருளை விளக்கம் செய்து நூறு பாடல்களைத் தொடுத்தார். அதுவே அருள் விளக்க மாலையாகும். எலும்பையும் உருக்கும்படி முப்பத்தொரு பாடல்களை அவர் முதலில் கண்ணாடியில் உள் நாடிப் பார்த்த எந்தையாம் கந்தவேளுக்கு அணிந்தார். அதுவே "தெய்வமணிமாலை" யாகும். நெற்றிக்கு நேரே புருவத்திடைவெளி உற்றுழி பார்க்க ஒளிவிடு மந்திரத்தை; பற்றுக்குப் பற்றாய பரமன் இருந்த இடத்தை சிற்றம்பலமெனத் தெளிந்து கொண்ட வள்ளலார்; அதை உலகுக்குச் சொல்ல ஆசைப்பட்டார் அதுதான் அருட்பெருஞ் ஜோதி அகவலாகும், அது பல இரகசியங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. தானும் தனது ஆன்ம நாயகனும் இரண்டறக் கலந்த அனுபவ நிலையை அழகுபட; ஒரு ஓவியம் போன்று தீட்டினார். அதுவே "அனுபவமாலை" யாகும். இவைகளையெல்லாம் நினைக்க நினைக்க நம்மை இறை நிலைக்கே அழைத்துச் செல்லும் பாலும், தேனும் கலந்த அருட்பாகு எனலாம்.

அது மட்டுமா? இல்லையில்லை இன்னும் எத்தனை எத்தனையோ "அருட்பா" என்னும் கடலில் அருள் மணிகள் பார்ப்பார் அற்று கிடக்கின்றன. ஒவ்வொரு பாடலும் ஒரு கோடிப் பொன் பெறும் ஆற்றல் உடையது; என்றால் அது மிகையாகாது.

சாகா அருளமுதம்

வள்ளலார் உலகெலாம் அருளரசு இயற்றுவதற்கு பத்துவிதமான அருளாரமுதத்தை வாயார உண்டு பேரானந்தப் பெருவாழ்வில் திளைக்க ஆசைப்படுகிறார். ஆறாந்திருமுறையில் அந்த பத்துவித அமுதமும் முத்துக் குவியல்களாகவே இருக்கின்றன. அந்த

அமுதத்தின் பெயர்களை அவரே மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார் எப்படி ? இதோ!

"மதிமண்டலத்தமுதம், இந்தாரருளமுதம், சாகா அருளமுதம், அருளோங்கு தண்ணமுதம், வானோர்க் கரிதெனவே மாமறைகள் சாற்றுகின்ற ஞானேதய அமுதம், எல்லாமும் வல்ல சித்தென்றெல்லா மறைகளும் சொல் நல்லாரமுதம், ஏழ் நிலைக்கு மேற்பால் இருக்கின்ற தண்ணமுதம், ஈனவுலகத்திடர் நீங்கி இன்புறவே ஞான அமுதம், திரையோ தசத்தே திகழ்கின்ற தென்றே வரையோது தண்ணமுதம், ஜோதிமலைமேல் வீட்டில் தூய திருவமுதம்."

இப்படி வள்ளலார் மட்டும் அந்த அமுதத்தை உண்ண மனம் பொருது "என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டும்" என எண்ணியே திருவருட்பாவை அதற்கு வழிகாட்டியாக எழுதி; ஐம்பத்தொரு ஆண்டுகள் இந்த செந்தமிழ் மண்ணிலே; பைந்தமிழ் கடை விரித்து நமக்காகக் காத்திருந்தார் அவர்.

பழைய பாதையில் சென்று பழகியவர்கள் யாரும் அந்தப் புதிய அன்புக் கடைக்கு—ஆன்மநேய அருட் கடைக்கு வரவில்லை. கடைசி முறையாக என்ன சொல்வதென்றே தெரியவில்லை அவருக்கு ஏன் ? ஆம்! தந்தி இல்லா வீணையாய், உடைந்த கண்ணடியாய், கிடந்த இந்த நிலைகெட்ட சமுதாயத்தைப் பார்த்து "கடைவிரித்தோம் கொள்வாரில்லை கட்டி விட்டோம்" என்று மனம் விசனமுற்று மறைந்தார் மருதூர் தந்த மாணிக்கஜோதி.

பரனளிக்கும் தேகம் இது.

எந்த மதத்திலும் இல்லாத வழக்கம் இந்து மதத்தில் உள்ளதை—இறந்தவரைச் சுடுகின்ற கொடுமையை

நோக்கினர் வள்ளலார், அவர் உள்ளம் எரிமலை யெனக் குமுறியது, உடல் நடுங்கியது " ஐயோ ! இறந்தவர்கள் பற்பலரும் உயிர்பெற்று எழுகின்ற தருணம் வரப்போகின் றதே, சமரச சுத்த சன்மார்க்கத்தார்க்கு சாகா வரமும், மற்றவர்கட்குச் செல்வ வளமும் கொடுக்க ஆண்டவர் அருள்செய்வார். இது உண்மை. நீங்கள் ! யாரையும் சுடாது புதைத்து விடுங்கள். அப்படியே சுட்டுத்தான் என்ன பலனைக் கண்டீர்? வெறும் சாம்பலைத்தான் காண் கின்றீர்; அது புன்செய் எருவுக்கும் போட வொண் ணாதே" என்று வருந்தி வருந்திப் பேசினர்.—பிணம் புதைக்க சம்மதிக்காது பணம்புதைக்கச் சம்மதிக்கும் இந்த கோழை யுலகம் அவர் சொல்லுக்குச் செவி சாய்க்க வில்லை. ஆனலும் துயரத்தோடு சோகக் குரலில் மேலும் பேசலானர்.

"பிறந்த வரை நீராட்டிப் பெருக வளர்த்திடுகின்றீர் ! பேயரே நீர்! இறந்த வரை சுடுகின்றீர் ! எவ்வண்ணம் சம்மதித் திரோ ?

என்று தனக்குப் பின்னேயாகிலும் உலகம் முன் னேறட்டும் எனக் கூவியது அந்த சமரசக் குயில் !

எந்தையே !

வள்ளலார் சொல்லுகின்ற அருள் உணர்ச்சியை — சோக நிலையை—அடுக்கு மொழியின் அழகை—ஓதியுண ராது பெற்ற அந்த உத்தமனின் வாழ்க்கையை; கையுற வீசி நடப்பதை நாணி கைகளைக் கட்டியே நடந்த கருணை யின் திருவுருவை நமது இந்திரிய அறிவுகொண்டு எப் படி எழுதுவது ? இசைத்திடவும், நினைத்திடவும் முடி யாத திருஒற்றியூர் தியாகப்பெருமானை முன்னிலைப் படுத்தி இதோ ! அவரே பேசுகின்ருர்.

"பொன்னஞ் சிலேயாய்! புரமெரித்த புகழ்சேர் ஒற்றிப் புண்ணியனே! வாயில்லாதவன் வழக்குறைப் பது போல; நின்னருள் பெற விழைந்தேன். இந்த புலேயனுக்கும் நின்னருள் கை கூடுமோ? கரும்பின் கட்டியே! தேனே! காமப்பித்து, ஆணவம், பொய், அழுக் காறு, சினம், வஞ்சம் கொலே முதலாம் பாவங்கட்கு ஆளாகித் துயர்க் கடலில் வீழ்ந்துழலுங் கொடிய மன முடையேன்.

"எந்தையே! என்பவர் தம் இன்னமுதே என்னு ரிமைத்
தந்தையே தாயே தமரே என் சற் குருவே
சிந்தையே யோங்குந் திருவொற்றி யையா வென்
நிந்தையே நீக்கி நிழலளித் தாலாகா தோ."

என்று தன்னேத் தாழ்த்தியும் இறைவனே உயர்த்தி யும் பேசிய வள்ளலார், ஆண்டவன் திருவருளே அடைய வேண்டுமென்ற இடைவிடாத ஏக்கமாக; இந்த தேகத் தையே நித்திய தேகமாக்கிக் கொள்ள நினேத்த ஜோதி நாதர்; மனித சமுதாயத்தை ஆட்டி அசைக்கும், உடற் பசியையும், உள்ளப் பசியாகிய—காமப் பசியையும் நீக்கி; பேரின்ப ஆசையால் கற்புடையாள் கணவனிடம் கொள் ளும் அன்பைப் போல தாளுெரு பெண்ணுகவே மாறி; காதலாகிக் கசிந்து கண்ணீரைக் கடலாகப் பெருக்கி நிற் கின்ருர்.

கற்பங்கள் பலகோடி செல்லத் தீய கனலின் நடு ஊசியின் மேல் காலே ஊன்றி, பொற்பறமெய் உண வின்றி, உறக்கமின்றிப் புலர்ந்து எலும்பு புலப்பட ஐம் பொறியை ஓம்பி நிற்பவருக்கு ஒளித்து மறைக்கு ஒளித்து மேலாஞ் சிற்பதத்தில் சின்மயமாய் நின்றிலங் கும் திருஒற்றியூர் தியாகப் பெருமானே திருமணம்செய்து கொள்ள அவளுக்குத்தான் எத்தனே ஆசை! ஐயோ

பாவம்! பற்றிப் படர்வதற்கு நல்லதொரு கொழுகொம்பை அவளே நாடி விட்டாளாம்.

மாலையிட்ட மங்கை!

நாம் கதைப் புத்தகங்களில் படிக்கும் சாதாரணப் பெண்ணல்ல இவள். மானைப் பழித்த விழியுடையாளாம். ஒருமாமயில் போலும் நடையுடையாளாம், தேனைப் பழித்த மொழியுடையாளாம், பெண் தெய்வமென்னும் சீருடையாளாம் அவள்.

பொன்போல் ஒளிரும் புற்றிடங் கொண்ட புனிதனை —கடலருகே காட்சி யளிக்கும் கற்பகத் தருவை தன் ஆன்ம நாயகனாக மணந்து கொள்வதென எண்ணி விட்டாளாம் அந்த அதிசயப் பெண்.

உலகந் தெரியாத அந்த சின்னஞ் சிறுவயதிலே தன் உயிரையே அவன் மேல் வைத்திருந்தாள். அவனும் அப்படித் தான் ஆசையும் பாசமும் கொள்வான் என்று எண்ணி இறுமாந்து இருந்தாளாம் அவள்.

இளையவர் செங்கை தொட்ட பந்தாகவும் சிறுவர் தம் பம்பரமாகவும் சதா அலைந்து கொண்டிருக்கும் மனமான ஒரு சிறுமியை உயிர்த் தோழியாக்கிக் கொண்டு முன்னிலைப் படுத்திப் பேசுகிறாள்.

கொள்ளித்தேள் கொட்டி குதிக்கின்ற பேய்க் குரங்கு போன்ற சுட்டிப் பெண்ணே! கண்டவிட மெல்லாம் காற்றினும் வேகமாய் அலைந்து திரியும் அவல நெஞ்சமே! உனக்கு எதுவேண்டுமானாலும் இன்று வாங்கித் தருவேன். எம்பிரான் வாழ்கின்ற திரு ஒற்றியூருக்கு என்னோடு வா! உனக்கு இந்திரன் வாழ்வு வேண்டுமா? அல்லது மாலும் அயனும் வாழ்ந்த அந்த பெரிய வாழ்வு வேண்டுமா? எது

வேண்டுமாயினும் தடையில்லை, நெஞ்சமே! இது வஞ்சமேயல்ல ;

> ''மன்னுருத்திரர் வாழ்வை வேண்டினையோ
> மாலவன் பெறும் வாழ்வு வேண்டினையோ
> அன்னவூர் திபோலாக வேண்டினையோ
> அமையு மிந்திரனாக வேண்டினையோ
> என்ன வேண்டினும் தடையிலை நெஞ்சே
> இன்று வாங்கி நான் ஈகுவனுனக்கே
> வன்னி யஞ்சடை யெம்பிரா னொற்றி
> வளங்கொளூரிடை வருதி யென்னுடனே''

என்று பரிந்து பரிந்து பேசுகிருள் அந்தப் பாவை. இல்லையில்லை அவனுக்காகவே அவள் இரவென்றும் பகலென்றும் வெயிலென்றும் மழையென்றும் காலங் கருதாது காத்திருந்தாள்.

ஞானிகளும், முனிவர்களும் அவளுக்குச் செவிலித் தாயாராம். தன் அருட் காதலை ஊராருக்குப் பறை சாற்று கிறவர்களும் அவர்கள் தானும். ''உலகில் மண்ணுறங் கும், மலையுறங்கும் அலைகடலும் உறங்கும், மானி லத்தே நமது பெண்ணுறங்காள்'' என்று பேசுகின்ருர் களாம், ஏசுகிருர்களாம்.

அன்று அவள் கண்ணினும் இனிய கணவர் பிரியும்போது பலமுறை தடுத்துரைத்தும் அவர் கேட்க வில்லையாம். அப்படியே மீறிச் சென்ருல் நீங்கள் திரும்பி வரும் போது இன்முகங் காட்டி வரவேற்க நான் உயிருடன் இந்த பொல்லாத உலகில் இருக்க மாட்டேன்'' என்றெல்லாம் பேசி, தடுத்தாளாம் அந்த தவ நங்கை.

''இதோ! வந்து விடுகிறேன் கலங்காதே கண்ணே! உன்னை நான் என்றும் கை விடமாட்டேன், ஆணை ;

நம் ஆணை'' என்று கையில் ஓர் பொற் கங்கணமுங் கட்டிச் சென்றவர் இன்னும் காணவில்லையாம். என்ன செய்வதென்றே தெரியாத தலைவி; ''சொல்லத் தொலையும் துன்பம்'', என்று நம்மிடமே பரிந்துரைக்க ஆசைப்படுகிருள்; அந்தப் பரிதாபத்துக் குரியவள். அவள் சொல்லுகின்ற அந்த சோகக் கதையைத்தான் நாமும் சற்று செவி கொடுத்துக் கேட்போமே.

அன்ெருருநாள்

சோலையும், தடங்களும் துரிசிலா அறச் சாலையும் மடங்களும், சத்திரங்களும், பாலையும் பழத்தையும் பருக லொத்த சொன் மாலையும் தொடுப்பவர் வாழ்கின்ற சீர் பெரும் ஒற்றியூராம் அது! திருமகள், கலைமகள் சிறந்த ஞானமாங் குருமகள் மூவரும் கூடி வாழ்வதும் அங்கு தானும். ஞான யோகத்தினை நண்ணினோர்களும், மோனமே பொருளென முன்னினோர்களும்; வானமே பெயரினும் இம்மாய வாழ்க்கையில் ஊனமே இருத்தல் என்று உவட்டினோர்களும் அங்குதான் வாழ்கின்ருர் களாம்.

சீரும், சிறப்பும் பொருந்திய பெருவிழா அங்கு நடைபெறுகின்றது என்று கேள்வியுற்றதும் கண்ணே கலாத விழாவைக் காணப் புறப்படுகிருள் அருட் காரிகை.

வீதிகளெல்லாம் விதவிதமான தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன. வகைவகையான வாத்தியங்கள் வானளாவி முழங்க; இரும்பொத்த கல் மனங்களும் கசிந்துருக; தியாகேசன் திருவுலாக் காட்சி வந்து கொண்டிருக்கின்றதாம். அந்நல் விழாவைக் காணும் பொருட்டு ஆயிரக் கணக்கான

ஆண்களும், பெண்களும் கூடிய வண்ணம் தம்மை மறந்து அருட்பெருஞ்ஜோதியை நினைந்த வண்ணம் நிற்கின்றார்களாம்.

பெறுதற்கரிய இந்த மனிதப் பிறவியிலேயே திருவருளைப் பெறத் துடிக்கும் அந்த அதிசயப் பெண் அருட் தலைவன் பவனி வரும் போது.

" உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக; செயிரெலாம் விடு கெனச் செப்பிய சிவமே.

என்று சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுது புலம்புகிறாள், கற்பூரமுங் கையுமாக நின்று புற்றிடங் கொண்ட புனிதனை நினைந்து நினைந்து நெஞ்சம் நெக்குருகிப் பாடினாள்—பாடுவதையே தொழிலாகக் கொண்டவள், தன்னை மறந்தாள், தன் வாழ்வை மறந்தாள், ஆனால் காலங் கடந்த தன் இதயக் கடவுளை மறக்கவே இல்லையாம் அவள்.

அருட் குயில் ஆரணங்கு

அன்று சின்னஞ் சிறிய வயதில், திரு ஒற்றியூர் வீதியிலே; விளையாடையிலே, மந்த மாருதம் வீசும் மாலை நேரத்திலே, அந்த காளை ஊர்தியிலே பவனி வந்தானே; திருஒற்றியூர் தியாகேசன் அவனைத்தான் மாலையிட்டாளாம் அவள். ஆனால் அன்று முதல் இன்று வரை சற்றும் அணைந்தறிய வில்லையாம். அவர் அன்று அவளை மாலையிட்டபோது "அஞ்சாதே ஏழுலகம் மதிக்க உன்னை மணந்தோம்" என்று தேனினும், பாகினும் இனிமையாகப் பேசி கை பிடித்தாராம். அவளும் உடனேஅவர் கால்பிடித்துக் கொண்டு "திருஒற்றியூர் தியாகேசா! எனக்கும், உனக்கும்

இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ? இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்கு எய்தும் பொருத்தமோ?'' என்று மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிருந்தாளாம் அந்த எழிலரசி.

அன்று அவள் மாலையிட்ட கணவர் மிகவும் நல்லவராம். இந்தப் பொல்லாத உலகம் எத்தனை குற்றம் குறைகள் புரிந்தாலும், அத்தனையும் பொருத்து நன்று புரிவாராம், நம்பினபேர்களை கை விடமாட்டாராம். சொல் தவருதவர் இன்று சொல் தவறியதும் ஏனோ? நான் சூடாமலர் போல் இருப்பதற்குத் தானோ?'' என்று சோகம் ததும்பிய குரலில் மனமாகிய தோழியிடம் அவளே கூறுகின்ருள் இதோ!

' நன்று புரிவார் திருவொற்றி
நாத ரெனது நாயகனுர்
மன்று ளமர் வார் மால் விடைமேல்
வருவார் அவரை மாலையிட்ட
அன்று முதலா யின்றளவு மந்தோ
சற்று மணைந்தறியேன்
குன்று நிகர் பூண் முலையா யென்
குறையை யெவர்க்குக் கூறுவனே''

என்று தாங்கொணுத் துயரத்துடன் தலைவி கூறி யதைக் கேட்டுக் கொண்டிருந்த மனமாகிய தோழி: கொஞ்சமேனும் ஈவு. இரக்கமின்றி தன் போக்கிலேயே போய்விட்டாளாம், ஐயோ பாவம்!

திருஒற்றியூர் தியாகப் பெருமானை மாலையிட்டு எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கும் அந்த அன்பு மயில் ஆடல்' குறி சொல்லி வரும் ஒரு குறத்தியைக் கண்டு விடுகிருள். பாசிமணியும், குன்றுமணியும் அணிந்து கையிலே மந்திரக் கோலை ஏந்திய வண்ணம் நடை

குலுங்க, இடைகுலுங்க நடந்து வருகிருள் அந்தக் குற நங்கை. நாகரிக மென்னும் பெயரால் அநாகரீக வழியில் செல்லும் ஆடம்பரங்களைப் பார்க்கிலும் இயற்கைப் பேரழகு வாய்ந்த மலை வாழ்க்கை அதிக அளவில் இன்பம் அளிக்கிறதாம் அவளுக்கு. தொல்லையும், துன்பமும் தாங்காத தலைவி குறத்தியிடம் குறி கேட்கிருள்.

ஏ! கொல்லிமலைச் சாரலில் வாழும் குறத்தியே! நந்தி தேவர் மகிழும் வண்ணம் நடனம் புரியும் எனது நாயகனுர் அன்று ஆடிவந்தார், நான் பாடி நின்றேன். மெல்லன என் அருகில் வந்தவர் "என்னையே நீ! பாடுக! என்னெடு கலந்து ஆடுக!" என்று கூறியவர் ஓடுகிருர்; அவர் ஓட்டம் பிடிக்க முடியாது நான் கண்ணீரும் கம்பலையுமாக நின்று அழுது புலம்புகிறேன், இந்த நிலையில் அவர் வந்து என்னை மணந்து கொள்வாரா? அல்லது கள்ளியெனவே வெறுப்பாரா? ஏதும் தெரியாது இருதலைக் கொள்ளி எறும்பே போல் ஏங்கித் தவிக்கின்றேனே நீ! என்சிந்தை மகிழ தெரிந்தோர் குறிதான் செப்புவையே!" என்று ஆடாது அசையாது அழுது கொண்டே குயில் ஓசையில் தன் குரல் ஓசையை எழுப்பினுள்.

"நந்தி மகிழ்வாய்த் தரிசிக்க நடனம்
புரியும் நாயகனுர்
அந்தி நிறத்தார் திருவொற்றி
யமர்ந்தார் என்னை யணைவாரோ
புந்தி யிலாளென் றணையாரோ யாதுந்
தெரியேன் புலம்புகின்றேன்
சிந்தை மகிழக் குற மடவாய் தெரிந்தோர்
குறிதான் செப்புவையே"

ஞான நாடகம்

என் துன்பத்தை எல்லாம் மாற்றி இன்பமளிக்க வந்த குற மடமாதே! அன்ருருநாள் திரு ஒற்றியூர் வீதியிலே; விளையாடையிலே படம் பக்க நாதர் பவனி வந்தார், அவர் வரவை பலநாள் எதிர் பார்த்திருந்த நான் என்னையும் மறந்து; என் கருவி கரணங்களையும் மறந்து அவரையே நினைந்து; கண்ணை யும், கருத்தையும் உள்நாடிப் பார்த்தேன். அவரும் பட்டாடை யுடுத்தி பவழம் போல் மேனியெல்லாம் பசுஞ் சாந்தணிந்து பாதம் நோவ இட்டெடுத்து நடமாடி என்னருகே வந்தார். "எவ்வூரீர்! எம்பெருமான்" என்றேன். "திருஒற்றியூர், நம் ஊர்" என்று போனர். ஒரு முறை பார்த்த நான் மறுமுறை பார்ப்பதற்குள் போய் விட்டாரே. என்னடி! என் குறையை எவர்க்கு எடுத்து இயம்புவது?

தேனைப் பழித்த மொழியுடைய குறவஞ்சியே! அன்று நான் கண்ட காட்சிகள் எல்லாம் நனவாகுமா? அல்லது கனவாகவே போய் விடுமா? ஆ! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே, அவர் என்னிடம் நடந்து கொள்வதெல்லாம் வெறும் நடிப்புத்தானே? ஆம்! அவர் ஓர் நாடகந்தான் நடத்துகிருர் அந்த நாடகத்தின் பெயர்தான் "ஞான நாடகமோ!" இப்பொழுதுதான் அந்த உண்மை எனக்குப் புரிகிறது. இந்த சீவ கோடிகளை ஆட்டி வைப்பானும், ஊட்டி வைப்பானும் அவன்தானே.

மானை வளர்த்த கையாலே வஞ்சப் புலியை வளர்த்தது போல; தவளையைப் படைத்து அதன் விரோதியாகப் பாம்பையும் படைத்தது போல, புல்லையும்

வளர்த்துப் அதைப் புசிக்கப் பசுவையும்வளர்த்ததுபோல, எலியைப் படைத்து அதன் விரோதியாகப் பூனையையும் வளர்த்ததுபோல மனிதனை நல்வழிப் படுத்த சன்மார்க்க நெறியையும் வகுத்து அவனை வாழ விடாது கெடுக்கும் பொல்லா வஞ்சக நெஞ்சத்தையும்— பொறி, புலன்களை யெல்லாம் தூண்டும் மாயா காரியங்களையும் வகுத்து விட்டானே ! இதையெல்லாம், நினைத்தால் என் உள்ளமே வானம் வெடிப்பது போல் வெடித்து சுக்கு நூருகி விடும் போலிருக்கிறதே! ஐயோ! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே நான் என்ன செய்வேன். அன்று இருந்த இடம் தெரியாது கிடந்த சிறியவள் உள்ளத்தில் அன்பை வளர்த்து; இன்று அந்த அன்புக்கு அணை போடுவதும் சரியா ? என் ஆசை யைக் கொல்லுவதும் நெறியா ?

அகங்கார முனைப்போடு வாழ்கின்ற ஒருவன் தன்னந் தனியாக ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டு அழு வானேல் பகைவராயினும் அவனைப் பார்த்திருப்பாரோ? நானும் அப்படித்தான் அழுக்காறு என்னும் பாவிகள் நிறைந்த உலகியல் ஆற்றில் விழுந்து இரவென்றும், பகலென்றும் தெரியாது அவரையே நினைந்து நினைந்து அழுகிறேன், தொழுகிறேன் அவர் மட்டும் என்னைப் பாராது இருக்கிருரே ; அவர் மனமென்ன கல்லா ? கல்லும் ஒரு காலத்தில் உருகும் என்பார்களே ! அவர் மனக் கல் என்பால் உருக வில்லையே. நான் என்ன அப்படி தவறு செய்து விட்டேன். இந்த சோக நாடகத்திற்கு ஒரு முடிவே இல்லையா ?

"அரந்தை யோடொரு வழிச் செல்வோன் றனையோ
ராற்று வெள்ள மீர்த்தலைத் திட வவனும்
பரந்த நீரிடை நின்ற ழுவானேற் பகைவராயினும்
பார்த்திருப் பாரோ

கரந்தை யஞ்சடை யண்ணிரடியேன் கலங்கக்
கண்டிருக்கின்றது கடனே
நரந்தமார் பொழில் ஒற்றியூருடையீர்
ஞான நாடக நவிற்று கின்றீரே''

"பிறவிக் கண்ணிலான் கைக் கொளுங் கோலைப்
பிடுங்கி வீசுதல் பெரியவர்க் கறமோ
மறவிக் கையறை மனத்தினே னும் மேல்
வைக்கு மன்பை நீர் மாற்றுதலழகோ
உறவிக் கொள்கையை யுள்ளிரே லிதனை
யோதிக் கொள்ளிட மொன்றிலை கண்டீர்
நறவிக் கோங்கிய வொற்றியம் பதியீர்
ஞான நாடக நவிற்றுகின்றீரே''

என்று அழகிய மலர் அனலிலே பட்டு கருகுவதைப் போல குமுறிக் குமுறி கதறினாள் கணவன் பிரிவை பொறுக்க முடியாத கற்புக்கரசி.

"உலகில் பாம்பு கொடியது என்று கூறுவார்கள் அதற்கும் என் கணவர் முன்னொருநாள் பரிந்து கருணை அளித்தாராம். ஆனால் எனக்கு மட்டும் ஏன் இன்னும் அருள் பாலிக்கவில்லை? ஐயோ! நான் என்ன பாம்பை விட கொடியவளா?" என்று தன்னைத்தானே நொந்து கொள்கிறாள்.

பெண்களுக்குப் பருவகாலம் வந்துவிட்டாலே உலகம் புரியாத ஒரு புதிராகவே போய் விடுகிறார்கள் அல்லவா? இதுவரையிலும் இனிய தோழியாக இருந்த மான், மயில், குயில்களெல்லாம் இன்று பகைவர்களாகக்கூட போய்விட்டார்களாம். தாயின் இனிய மொழிகளெல்லாம் இன்று வேப்பங்காய்போல் கசக்கின்றதாம் அவளுக்கு.

இது என்னே! வடிவுடை மாணிக்கமே?

ஏ! மலைவாழ் குறத்தியே! நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம்; என்னைத்தான் அவர் மறந்து விட்டார் என்றாலும் என்னைப்போல் இன்னொரு பெண்ணையும் மறநெஞ்சத்தோடு; ஏமாற்றியே விட்டாராம். நான்தான் அவரை முன்பின் தெரியாமல் மயக்கத்தால் மாலையிட்டு வருவார் வருவாரென்று வழிமேல் விழியாய் நின்று கண்ணீரை வடித்த வண்ணம் காத்துக் கிடக்கிறேன். அவளோ எல்லாம் தெரிந்தவளாம்; உலக நாயகியாம், அவளுடைய அருட்பார்வையில்தான் இந்த தருமமிகு சென்னைமா நகரமே வாழ்கின்றதாம். இந்த சத்திக்கு நேர் சென்னையில்தான் அந்தக் கந்தனும் வாழ்கின்றானும்.

இப்படிப் படைப்புப் பல படைத்துப் பலருக்கும் சீரும் சிறப்பும் தருகின்ற செந்தமிழ்ச் செல்வியாகிய வடிவுடை மாணிக்கமும்; பித்தனென்னும் பேர் படைத்த அந்த சித்தனைத் துணிந்து முன்னொரு நாள் மாலையிட்டாளே! இக்கொடுமையை நினைத்தால் எனக்கே வியப்பாகத் தான் இருக்கின்றது" என்று வடிவாம்பாளை முன்னிலைப் படுத்தி பேசுகிறாள் அந்த பொற்சிலை.

"சோலையிட்டார் வயலூரொற்றிவைத்துத்தன் றொண்டரன்பின்
வேலையிட்டாற் செயும் பித்தனை மெய்யிடை மேவு கரித்
தோலை யிட்டாடுந் தொழிலுடையோனைத் துணிந்து முன்னாள்
மாலை யிட்டாயிஃ தென்னே வடிவுடை மாணிக்கமே."

செங்கையிற் கண் குற மங்கை நல்லாய்! நீ! கூறியது முற்றிலும் உண்மைதான்; இந்த உலகமே வியக்கும்படி எனது துரை நான் வாழ்கின்ற சிறு குடிசைக்கு வரத்தான் போகின்றார், நீயே பார்த்து

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கத்தான் போகிருய். இன்று என்னைப்பார்த்து கேலியும், கிண்டலும் செய்யும் கோழை யுலகம் நாளை நீ! ஒரு பெண் செய்த தவம் எத்தவமோ!'' என்று வானளாவிப் புகழ்ந்து பேசத்தான் போகின்றது. இன்று வாது பேசிய மனிதர்களெல்லாம் நாளை என் குடிசை வாயிலில் வந்து வாய்பொத்தி, கைகட்டி நிற்கத் தான் போகின்ருர்கள். அதுமட்டுமல்ல ; சிற்சபையும், பொற்சபையும் சொந்தமெனதாச்சு, தேவர்களும், மூவர் களும் பேசுவதெல்லாம் என் பேச்சு. நான் பெற்றபேர் இனி உலகில் யார் பெறப் போகிருர்கள்? இதை நினைத்தால் எனக்கு நேரம் போவதே தெரிவதில்லை. ஏ! குற்ருலத்தில் வாழ்கின்ற வசந்த வல்லியே! என்னையும் மறந்து என்னென்னமோ உன்னிடம் பேசி விட்டேன். நீ! இப்பொழுதே அவரிடம் சென்று என் குறைகளை எல்லாம் மெல்ல மெல்லச் சொல். அப்படி சொன்னல் உனக்கு வாய் முத்தா சிந்திவிடும்?

என் கண்ணிற் கலந்த கணவரிடம் நீ! எப்படி சொல்லவேண்டும் தெரியுமா? சுந்தரர் பாட்டுக்காசைப் பட்டு பறவை நாச்சியாரிடம் தூது சென்ற பரமா! சின்னஞ்சிறு பருவத்திலே எம் தலைவியை மாலையிட்டு " அன்றிதோ வருகின்றேன் " என்று வந்த நீங்கள்! ஏன் இன்னும் வரவில்லை.? உங்களையே எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கும் அந்தப் பேதைப் பெண் கண்ணீரைத் துடைக்காது இங்கு என்னசெய்துகொண் டிருக்கின்றீர்கள் ?'' என்று கேள். அவர் வெட்கித் தலை குனியும்படி செய் '' என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசினுள் அந்த தவச் செல்வி.

"தவள நீற்று மெய்ச் சாந்த விநோதரே
பவள மேனிப் படம் பக்க நாதரே

கவள வீற்றுக் கரியுரி போர்த்தநீர்
இவளை யொற்றி விட்டெங்ஙனஞ் சென்றீரோ.''

பவனி வரக் கண்டேன்

அண்ணல் பவனி வரக்கண்ட அன்று முதல் இன்று வரை அவள் உண்பதில்லை, உறங்குவதுமில்லை தன்னை ஒப்பனை செய்து கொள்வதும் இல்லையாம். இந்த வஞ்சக உலகம் கழுகுகண் கொண்டு அவளைப் பார்ப்ப தோடு; ஊரில் உள்ள பெண்களெல்லாம் அவமதித்து பேசுகின்றார்களாம். குசுகுசு வென்று ஏசுகின்றார்களாம். இதை யெல்லாம் கேட்டு அவள் பைத்தியம் பிடித்தவள் போல் ஆகிவிட்டாள். "இன்னும் சிறிது நேரத்தில் என் செங்கை பிடித்தவர் இங்கு வராவிட்டால் என் உடல் வேறு, உயிர் வேறாகப் போய்விடும்'' என்று வேதனை முகத்துடன் கன்றின் குறலைக் கேட்டு கதறி அழும் பசுவைப்போல், பச்சைப் பசேலென படர்ந்திருக்கும் அந்த மகிழ மரத்தருகே சோர்வோடு வான வெளியைப் பார்த் தாள் அந்தப் பைங்கிளி. அப்பொழுதுதான் அந்த அழகு நாரைகள் பறந்துகொண்டிருந்தனவாம் அங்கே.

காதல் வயப்பட்டவர்கள் மானையும், மயிலையும், தன் ஆசை நாயகனிடம் தூது அனுப்புவது இயற்கைதானே! அந்த முறையில்தான் நாரையை முன்னிலைப் படுத்தி இரக்கத்தோடு பேசுகிறாள் அவள்.

ஏ! சிவந்த கால்களை உடைய நாரைகளே! நீங்கள் செல்கின்ற வழியில் என் கண் கலந்த கணவரைக் கண்டு நான் படும் பாட்டை—துன்பங்களை எல்லாம் நன்றாய் நவிலுங்கள். பொல்லாத இந்த ஆசை நோய்க்கோர் மருந்து கொடுக்கும்படி எடுத்துச் சொல் லுங்கள். உலகத்திற்கே வைத்தியம் செய்கின்றாராம்

அவர். ஆகையால்தான் வைத்திய நாதர் என்ற பெயர் வந்ததாம் அவருக்கு. ஆனால் எனக்கு மட்டும் பிறவிப் பெரும் பிணியை நீக்க மருந்து கொடுக்க மறந்து விட்டார் போலும். தன்வேலை தன் குடும்பம் என்ற பாசமே இல்லையா ? இந்த உலகத்திற்கே தன் வாழ்க் கையைத் தியாகம் செய்து விட்டீர்களா? ஆகையால் தான் தியாகப்பெருமான் என்ற பெயர் வந்ததோ என்று கேளுங்கள். உங்களுக்குப் பொன்னணி போடுவார் என் கணவர். அவர் ஊர் என்ன ? பேர் என்ன ?'' என்று கேட்கின்றீர்களா? வண்ணத் தமிழிலே வசனம் புகன்ற வண்ணம் ஒற்றியிலே நடிக்கும் தியாகர்தான் அவர்.

''வடிக்குந் தமிழ்த்தீந்தேனென்ன வசனம்
புகல்வார் ஒற்றி தன்னில்
நடிக்குந் தியாகர் திருமுன் போய்
நாராய் நின்று நவிற்றாயோ
பிடிக்குங் கிடையா நடையுடைய
பெண்க ளெல்லாம் பிச்சியென
நொடிக்கும் படிக்கு மிகுங் காம
நோயால் வருந்தி நோவதுவே.''

முகக்குறி, அகக்குறி சொல்லி வந்த வசந்த வல்லி யாகிய அன்புக் குறத்தியையும், பறந்து திரிந்த அந்தப் பறவையையும், முத்தமிழால் வைதோரையும் வாழ வைக்கும் தனது தலைவனிடம தூது அனுப்பினாள் அந்த தேன்மொழிப் பெண்ணரசி. ஆனாலும் அவர் இன்னும் வந்தபாடில்லையே? அவள்தான் என்ன செய் வாள் பாவம்! இன்பத்திலும், துன்பத்திலும் தலைவி யோடு இணைபிரியாதவள் அந்த மனமாகிய தோழி ஒருத்திதானும். அவளையும் தன் நாயகனிடம் தூது அனுப்பலாமா ? என்று எண்ணுகிறாள் அந்த வானரசி.

ஆனால் உலகில் உள்ள தோழிகளைப் போல அல்ல இந்த மனமாகிய தோழி. நன்மையும் செய்வாள் அதே நேரத்தில் தீமையும் செய்துவிடுவாளாம்; ஆக்கவும், அழிக்கவும் சத்தி உண்டாம் அவளுக்கு. ஆகவேதான் ஞானிகளும், முனிவர்களும் அவளைக் கண்டதும் நடு நடுங்கிப் போகின்றார்களாம். ஆடுந்திரிகை அரைச் சுற்று வருவதன் முன் ஓடும் தொழில் ஒரு கோடி செய்யும், அவள் நிலையை நன்கு உணர்ந்து அவளிடம் மரியாதைகொள்ளும் தலைவி. தன் குறையை அவளிடம் எப்படிச் சொல்லுவது என்று தெரியாது திருதிருவென விழித்தாள். ஆனாலும் எப்படியோ தலைவியின்மேல் இரக்கம் பிறந்து விட்டதாம் தோழிக்கு. ஏன்? ஆம்! நன்மை செய்தவள் தீமை செய்யமாட்டாள் என்றும், தீமை செய்தவள் நன்மை செய்ய மாட்டாள் என்றும் சொல்ல முடியாதல்லவா? ஆற்றொணாத துன்பத்துடன் நாளுக்கு நாள் தனது உயிரினும் இனிய தலைவி நலிந்து வருவதைக் கண்டதும் தோழி பரிதாபத்தோடு பேசுகிறாள்:—

"தீமையில்லாதப் பெண் மாமயிலே! உன்னைச் சேர்ந்து கலந்தவர் யார்? உன்னோடு நான் பழகிய நாட்களில் இந்தஅவலநிலையை என்றுமே நான்கண்டது மில்லை கேட்டது மில்லையே? நீ! படும்பாடு பஞ்சும் படாது போலிருக்கிறதே. ஏன்? உனக்கு என்ன குறை நேர்ந்தது? எதையாவது பார்த்துப் பயந்து விட்டாயா? அல்லது யாரையாவது கண்டு மயங்கி விட்டாயா? உன்னுள்ளத்தில் எழுதி வைத்திருக்கும் அந்த ஓவியத்தை—ஆடல் அழகனைத்தான் கொஞ்சம் சொல்லக் கூடாதா? நானும் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்று மனமாகிய தோழி அன்பு

ததும்பக் கேட்டதும் ; தலைவி தன் வீணைக் குரலில் பதில் உரைப்பதின் பாங்கே ஒரு தனிச் சிறப்புடையது.

"பொன்னென் றொளிரும் புரிசடை யார்
புனை நூலிடையார் புடை யுடையார்
மன்னென்றுலகம் புகழொற்றி
வாணர் பவனி வரக்கண்டேன்
மின் னென் றிலங்கு மாதரெலாம்
வேட்கை யடைய விளங்கிநின்ற
தின்னென் றறியே னவரழகை
யென்னென் றுரைப்ப தேந்திழையே."

"அள்ளிக் கொடுக்குங் கருணையினு
ரணிசே ரொற்றி யாலயத்தார்
வள்ளிக் குவந்தோன் றனையீன்ற
வள்ளல் பவனி வரக்கண்டேன்
துள்ளிக் குதித்தென் மனமவரைச்
சூழ்ந்த தின்னும் வந்ததிலை
எள்ளிக் கணியா வவரழகை
யென்னென் றுரைப்ப தேந்தி ழையே."

தில்லையோ அன்றி திரு ஒற்றியூரோ?

என் அன்பிற்குரிய தோழியே! எனது ஆற்றாமையை அடிக்கடி நீ !கேட்பது; மணந்தார் உயிர் உண்ணும்மாலைப் பொழுதைப் போன்று பழைய நினைப்பை உண்டாக்குகிறாய்; என்னிலையில் நீ இருந்தால் இப்படி எல்லாம் வாயின் அளவை தெரியாது வார்த்தைகளைப்பேசமாட்டாய். எனக்கு ஏதாகிலும்உதவிசெய்ய எண்ணமிருந்தால் இப்பொழுதே நல்லதொரு சோதிடரை அழைத்து வந்து அவர்க்கும், எனக்கும் மணப் பொருத்தம் உண்டா இல்லையா என்று பார்த்துவிடு. சொல்லாலும், பொருளாலும் சுட்டொண்ணாத என் கண்

கலந்த கணவர் என்னை கைக்கொள்ளுமிடம் தில்லைச் சிற்றம்பலமோ அல்லது இந்த ஒற்றிநகரோ? என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. களித்து மாலை கொடுப்பாரா? அல்லது கள்ளி யெனவே விடுப்பாரோ என்பதை இன்றே நான் அறிந்து தெளிந்து கொள்ள வேண்டும்.

"தோழி! இளமைப் பருவமானது வசந்த காலம் போல வருவது போவ தில்லையே, எப்பொழுதோ, ஒரு முறை வந்து போய் விடுகிறதல்லவா? இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையில்லை எப்பொழுதாயி னும் கூற்றுவன் வருவான். அவனைப் போற்றவும் போகான் பொருளொடும் போகான் என்பது உனக்கு தெரியாதா? அதோ! வரும் அந்த சோதிடர் யார்? ஆம்; எனக்காகத்தான் என் சுவாமி இவரை அனுப்பி வைத் தாரோ? இதோ! நானே சென்று அவரைக் கேட்கிறேன்" என்று தயங்கித் தயங்கி நடந்தாள் மரண பயத்தைத் தவிர்த்த மான். அவள் பேசுவதெல்லாம் இதோ! செந்தேன்.

"பொன்னஞ் சிலையாற் புர மெரித்தார் பொழில் சூ
ழொற்றிப் புண்ணியனுர்
முன்னஞ் சருந்து முக்கணனுர் மூவ
ரறியா முதல்வர் வர
இன்னஞ் சில நாள் சென்றிடு மோ
விலதே லின்று வருவாரோ
உன்னஞ் சிறந்தீர் சோதிடம் பார்த்
துரைப்பீர் புரி நூலுத்தமரே".

"பெற்றி யறியாப் பிரமனுக்கும் பெரிய
மாற்கும் பெற வரியார்
புற்றினரவார் கச்சையுடைப்
புனித ரென்னைப் புணருமிடந்

தெற்றி மணிக்கால் விளங்கு தில்லைச்
சிற்றம்பலமோ வன்றி யிந்த
ஒற்றி நகரோ சோதிடம் பார்த்
துரைப்பீர் புரி நூலுத்தமரே'',

என்று இரக்கத்தோடு இயம்பினள். அவரோ எதுவுமே பேசாது ''அண்ணனும் நோக்கினன் அவளும் நோக்கினள்'' என்று இயம்புவதைப் போல ஏளனத்தோடு; போய் விட்டாராம். அவர் இயல்பே அப்படித் தானே?

காலமோ ஒன்றின்பின் ஒன்ருக உருண்டோடின. இப்படி நாளென ஒன்றுபோல் காட்டி ஓடுவதும் என்றைக் காவது ஒரு நாள் கூற்றுவனேடு இந்த உயிரை நாடு வதும்தானே அதன் தொழில்?

நாளுக்கு நாள் ஆசை முகம் மறந்துபோய் துன்பமும், துயரமுங் கொண்டு இங்கே வாடுகின்றவள் தன் காதலரை நேரே கண்டு ''எல்லாமுடைய திரு ஒற்றியூர் தியாகப் பெருமானே! காலில் நகம் முளைத்த நாள் முதலாக உங்கள் வரவுக்காக கண்ணீர் வடித்து காத்துக் கிடக்கும் இந்த அபலை அஞ்சுகத்தை சற்றுக் கண்திறந்து பாருங்கள்'' என்று வெட்கம் விடுத்துக் கேட்டுவிட்டால் தான் என்ன? ... ஆனல் ... அவர் சிரித்து திருவாய் மலர்ந்து என்னை ''நீ யார்?'' என்ருல் நான் என்ன செய்வேன், ஊரில் உள்ள பெண்களெல்லாம் என்னைப் கேலியாக பார்த்து கை கொட்டி இகழ்வார்களே'' என்று அவளே மறுகணம் எண்ணுகிருள்.

''ஓண முடையான் ருெழுதேத்து மொற்றி
நகர் வாழுத்தமர் பான்
மாண வலியச் சென் றென்னை மருவி
யணை வீ ரென்றே நான்

நாணம் விடுத்து நவின்ருலும்
நாமார் நீயார் என்பாரேல்
ஏண விழியா யென் செய் வே
னென்னே மடவா ரிகழாரோ''.

''ஊரென்று டையீ ரொற்றிதனே
யுலக முடையீ ரென்னே யணே
வீ ரென்றவர் முன் பல ரறிய வெட்கம்
விடுத்துக் கேட்டாலுஞ்
சேரென்று ரைத்தா லன்றியவர்
சிரித்துத் திருவாய் மலர்ந் தெனே நீ
யாரென்று ரைத்தா லென் செய்வே
னென்னே மடவா ரிகழாரோ''.

அன்று நான் சிற்ருடை உடுத்தி சிறு சோறு சமைத்து; கையாலே கட்டிய மணல் வீட்டை மாலேப் பொழுது வந்ததும் காலாலே அழித்து விளேயாடையிலே; கல்லேயும், கனிவிக்கும் வண்ணம் பவனி வந்தாரே என் செங்கை பிடித்த செந்தழல் மேனியர்; அவரை ஓடியாவது பிடிக்கலாம் என்ருலும் அவர் ஓட்டம் பிடிக்க முடியாதே'' என்று எண்ணுகிருள் ஏதும் அறியா இளமாமயில்.

''தில்லே யுடையார் திரு வொற்றித்
தியாகரவர் தம் பவனிதனேக்
கல்லே யுருக்கிக் காண வந்தார்
காண நமது கரந்திரவி
பல்லே யிருத்தார் நமைத் திரும்பிப்
பாரா தோடுகின்ருர் நாம்
ஒல்லே யோடினுலு மவரோட்டம்
பிடிக்க வொண்ணுதே''.

திலகமனேய தோழி! வட்டிலிலும், தொட்டிலிலும், மார்மேலும், தோள்மேலும் வைத்தென்னே பாலூட்டிச்

சீராட்டி வளர்த்த என் தாயோ பாராதிருக்கிருள். அன்று என் கைகலந்த கணவர் இன்று கண்கலங்கும்படி செய்து விட்டார். அன்று பாயில் படுத்த நான் எழுந்திருக்காது என்னென்னமோ பிதற்றிக் கொண்டிருக்கிறேன். நீ யோ! அருளடையும் ஆசையை மாற்றுகிருய்; கற்பகத் தருவை நாடிப் பின் காஞ்சிரங் கனியை கருதுவார் உண்டோ?" என்று கதறி அழுதாள் அந்த வஞ்சிக் கொடியிடையாள்.

என்னருமை மகளே !

உயிரினும் மேலாக மதிக்கும் தன் அருமை மகள் இளமை கண்டு மகிழ்ந்த செவிலித்தாய், இந்த துய ரத்தைக் கேள்வியுற்றதும் கண்ணீரும், கம்பலையுமாக கண்ட இடமெல்லாம் கண்ணுலே தேடி வருகிருள். இச் சோக நாடகத்தின் முடிவு அவளுக்கு ஒன்றுமே விளங்க வில்லையாம். தன் ஆசை மகள் இவ்வளவு சீக்கிரம் இந்த பயங்கர நிலமைக்கு வருவாள் என்று அவள் கன விலும் கருத வில்லையாம். "ஐயோ! நான் பெற்ற செல்வமே! ஊர் என்ன, பேர் என்ன, குலமென்ன, கோத்திரமென்ன என்பதை யெல்லாம் தெரியாது யாரையோ; "மாலையிட்டேன்" என்கிருயே; உன் அறி யாமைக்கு நான் என்ன செய்வேன்?

என்னருமைக் கண்மணி! நீ! மாலையிட்ட கணவ ருக்கு ஊருமில்லை, பேருமில்லை, உற்றவர் பெற்றவர் யாருமில்லை என்பது உனக்குத் தெரியாதா? சீர் சான்ற சன்மார்க்கச் செல்வியே! அவர் வாழ்கின்ற ஊரையே ஒரு காலத்தில் வறுமையால் ஒத்திக்கு—அடகுவைத்து கடன் வாங்கினராமே; ஆகையால் தான் "ஒற்றியூர்" என்று பெயர் வந்ததாம். இதெல்லாம் உனக்குத் தெரிய வில்லையே பைத்தியக்காரி.

நீதி நெறி தவருதவளே! உன் நெஞ்சில் புகுந்தவர் உடுத்ததெல்லாம் பட்டாடை யென்றும், பூண்டதெல்லாம் பொன்னணி என்றும் எண்ணி விட்டாயோ? அது பாம்பென்று உனக்குத் தெரியாது. பாம்பென்ருல் படையும் நடுங்குமே. கல்லேயுருக்கும் கனிமொழியே! ஏமாந்தவரை எல்லாம் ஏமாற்றும் அந்த ஈசரை மணந்து என்ன சுகம் பெறுவாய்? ஏழையடி நீ! என் மகளே!" என்று கோபச்சிரிப்பு! கொப்பளித்த கண்ணீருடன் பரிதாபப்படுவதைப் பாருங்கள்!

"மட்டுக் கடங்கா வண்கையினுர்
வளஞ்சே ரொற்றி வாணரவர்
பட்டுத் துகிலே திசைகளெலாம் படர்ந்த
தென்னப் பரிந்தனேயோ
கட்டத் துகிலுங் கிடையாது
கந்தை யுடுத்த தறிந்திலேயோ
இட்டுப் புணர்ந்திங் கெது பெறுவா
யேழையடி நீ! யென் மகளே".

என்றெல்லாம் இகழ்ந்து கூறி; அவள் காதலனே மறக்கும்படி மன்ருடுகிருள் செவிலித்தாய். சாதாரணப் பெண்ணுக இருந்தால் இல்லாதும், பொல்லாதும், சொல்லி அவள் மனத்தை மாற்றி விடலாம். ஆனல் இவளோ அருள் நங்கையாயிற்றே! ஊராசை, உடலாசை, உற்றவர் பெற்றவர் ஆசையொன்றும் இல்லாது கடவுள் ஆசையொன்றே பெரிதென எண்ணும் தவ நங்கையைத் தாய் இகழ்ந்து பேசியதும்; தலைவியின் உள்ளத்தில் கோபத்தீ மூண்டு விட்டது. தன்னே வளர்த்தெடுத்த தாயினிடம் மறுத்துரைக்காது; தோழியிடம் வேதனே முதத்துடன் கூறுகிருள் அந்த வேல்விழியாள்.

"என் மனத்திற்கிசைந்த தோழி! அன்று சின்னஞ் சிறு வயதில் என்னை மாலையிட்டு சென்றவர் என்னதான் கொடுமை செய்தாலும் அவரை நான் மறக்கவே மாட்டேன். அப்படியே நான் அவரை மறந்தாலும் அவர் என்னை மறக்கவே மாட்டார். இதுவரை நான் வான் மறந்தேன், வானவரை மறந்தேன், மாலயனை மறந்தேன், உருத்திரரை மறந்தேன், ஊன் மறந்தேன், உயிர் மறந்தேன், உணர்ச்சி யெலாம் மறந்தேன், என் ! இந்த உலகத்தை வேண்டுமானாலும் மறப்பேன் ; ஆனால் அவரை மட்டும் மறக்கும்படி இன்னொரு முறை சொல்லாதே. கை நிறைந்த பொருளைவிட கண் நிரைந்த கணவனையே காரிகையர் விரும்புவர் என்று உனக்குத் தெரியாதா? நீயும் ஒரு பெண்தானே ? என்று தேம்பித் தேம்பி அழுகிருள் தேன்மொழியாள்.

"உலக முடையார் நம்மூரை யொற்றி
வைத்தா ரென்றாலும்
அலகில் புகழார் காபாலியாகத்
திரிந்தா ரென்றாலும்
திலகமனையார் புறங் காட்டிற்
சேர்ந்து நடித்தா ரென்றாலும்
கலக விழியாய் நானவர் மேற்
காத லொழியேன் கனவினுமே."

"எல்லா முடையார் மண் கூலிக்
கெடுத்து பிழைத்தா ரானாலும்
கொல்லால் நலத்தார் யானையின் றேற்
கொன்று தரித்தா ராளுலும்
வல்லார் விசையன் வில்லடியால்
வடுப்பட்டு வந்தார் ராளுலும்
கல்லா முலையாய் நானவர் மேற்
காத லொழியேன் கனவினுமே."

என்று அருதியிட்டவண்ணம் உறுதியோடு கூறி விட்டாளாம். கதிரவனே காற்றினும் வேகமாய் கடுகி ஓடு கிருனும்; அவன்பின் ஓடுகின்றன ஒவ்வொரு நாட்களும். இனி கூற்றுவன் உயிர் வேறு உடல் வேருக பிரிக்க வெகுண்டு வருவானேல். அப்பொழுது நான் என் செய்வேன் ? மொட்டு மலராகலாம் மலர் மொட்டாகுமா? நான் எப்படி அழுதாலும் அந்த வாழ்வு மறுபடியும் வரப் போவதில்லையே ? அது போனது போனதுதானே, இதெல்லாம் அவருக்கு தெரியாதா என்ன ?

மனிதன் புலியைக் கொன்ருல் அது விளை யாட்டுக்குச் செய்யும் வேட்டை, புலி மனிதனைக் கொன்ருலோ மிருகத்தனம். இதனைப் போன்றதே எனக்கும், அவர்க்கும் உள்ள தொடர்பு.

ஆண்கள் பெண்கள் வாழ்க்கையை எப்படி வேண்டு மானுலும் கெடுக்கலாம்—நசுக்கலாம் அது நீதி, ஆனல் பெண்கள் மனதில் ஏதேனும் சிறிது நினைத்தால் கூட அது அநீதி மட்டுமல்ல; கடல் பொங்கும்! வானம் வெடிக்கும்! பூமி அதிரும்! என்று ஆயிரமாயிரம் நீதியை வாயில் நீள ஓதும் இந்த கோழையுலகம் என் னிதய வானரசை அழைத்து வந்து என் வாழ்க்கையை வளப்படுத்த வில்லையே? இதோடு நான் எண்ணிய அந்த அமர வாழ்வுபோய் விட்டதா? இனிமேல் என் வாழ்வு நிலவில்லா வானந்தானு? நீறில்லா ஆறுதானு? சிலை இல்லா கோயில்தானு? இல்லை யில்லை நான் இனி பூவிழந்து, பொட்டிழந்து போகவேண்டியவள்தான். இல்லிழந்து இதயம் ஒடிந்து மாளவேண்டியதுதான். சேச்சே! என்ன விபரிதமான சிந்தனை ! அப்படி அப்படி ஒன்றும் எனக்கு நேராது இதற்கோர்

முடிவு இன்றே கண்டு விடுகிறேன்''. என்று வீரத்தோடு ஏங்கியவள் உள்ளத்தில் அறிவிற்கும், மனத்திற்கும் பெரும் போராட்டம் நடக்கத் தொடங்கின. போராட்ட மென்ருல் நாம் இன்று காணும் நாடு பிடிக்கும் அரசியல் போராட்டமல்ல இது. ஆண்டவனிடம் தன் உள்ளத்தை ஒப்படைக்கும் அருட்போராட்டம்.

''இறைவனை நீ! அடைய வேண்டுமானுல் பாலுக்கு பாலகன் தாயை வேண்டி அழுவதைப் போல இன்றே ஓடு'' என்று தூண்டியது அறிவு. ஓடாதே நில்! ஒரு நாளைக்காவது உண்மையை உணர்ந்து உன்னை நினைந்து அவனே ஓடி வருவான் என்று தடுத்தது மனம்.

இருவருக்குமே ஊன்று கோலாக இருப்பது வள்ளுவர் குறள் தான்.

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.''

ஆகையால் நீ! ஓடு!'' என்றது அறிவு.

''பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.''

என்பதை மறந்து நீ! ஓடாதே என்றது மனம்.

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.''

என்ற ஒண் குறளை மறந்திடாது உடனே ஓடு', என்றது அறிவு.

''ஒட்டார் பின் சென்ருெருவன் வாழ்தலில் அந்நிலையே
கெட்டானெனப் படுதல் நன்று.''

என்ற தன்மானக் குறளை மறந்து நீ! ஓடாதே'' என்றது மனம்.

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணுமுள."

என்ற குறள் நெறியில் நீ! ஓடு" என்றது அறிவு.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர் நீப்பர் மானம் வரின்."

என்ற அச்சமில்லா அருங்குறளை மறந்து நீ! ஓடாதே என்றது மனம்.

"பொருளற்ருர் பூப்பர் ஒருகால் அருளற்ருர்
அற்ருர் மற்ருதல் அரிது."

என்ற அருள் நெறியில் துணிந்து நீ! ஓடு! ஓடாதே! ஓடு! ஓடாதே!. என்ற ஓட்டத்துக்கிடையே தன்னை மறந்தாள், தன்னை சூழ்ந்திருக்கும் அன்னையையும், அத்தனையும் அன்றே நீத்து பேய் பிடித்தவளைப் போல இதோ! ஓடுகிருள் தியாகப்பெருமான் திருச்சன்னதியை நோக்கி!

தலைவியின் அருள் உணர்ச்சியையும் அன்பு நெகிழ்ச்சியையும் கண்ட புற்றிடம் கொண்ட புனிதர் புன்னகை தவழ்ந்த முகத்துடன் பொற் செல்வியைப் பார்த்து "அருள் நலங்கனிந்த அன்பே! வருக! சன் மார்க்கம் விளங்க, உலகத்திடையே விளக்குக! அறியாமை என்னும் இருட்டறைக்குள் சிக்கித் தத்தளிக்கும் இந்த மக்களுக்கு நல்லறிவு புகட்டுக!" என்று மாலையணிந்தவர் மேலும் பேசுகிருர் :—

அருட் செல்வியே! காற்ருலே, புவியாலே ககனமதனலே. கனலாலே, புனலாலே, கதிராதியாலே, கூற்ருலே, பிணியாலே, கொலைக் கருவியாலே, கோளாலே, பிறவியற்றுங் கொடுஞ் செயல்களாலே, வேற்ருலே யெஞ்ஞான்றும் அழியாத தேகம் வேண்டுமென பலநாள் என்னை வேண்டினய்; அதை இன்றே

உனக்கு பூரண சுதந்திரமாய் கொடுத்துவிட்டேன். இனி உன்தேகம் கற்பூரம் மணக்கும் அதுவே என்னோடு கலந்ததின் அடையாளம்.

இனி உன் துன்பமெல்லாம் தீர்ந்தன சுகம் பலித்தது நினைச் சூழ்ந்தது அருள் ஒளி நிறைந்த சுத்த சன்மார்க்கம் உனக்கே சுதந்திரம் ஆனது. உலகில் வன்பெலாம் நீக்கி நல்வாழ்வு வாழ்வதற்காக மன்னுயிர்கள் எல்லாவற்றையும் அழைக்கின்றாய் நீ! உன்றன் மன நினைப்பின்படிக்கே அன்போடு பெறுக! நீடூழிகாலம் விளையாடுக! அருட்ஜோதி ஆட்சி இதோ! தந்தோம் உன்னைக் கைவிடோம் ஆணை! நம் ஆணை!

மாற்றறியாத செழும் பசும் பொன்னே! மாணிக்கமே! சுடர் வண்ணக் கொழுந்தே! என்னைக் காண்பதற்கு வான் கண்ட தேவர்களும், நாரணரும் பிறரும் மாதவம் புரிந்து வருந்துகின்றார்கள். ஆனால் நீ! கண்ட காட்சி அவர்கள் காணவில்லையே. நீ! ஒரு பெண் செய்த தவம் எத்தவமோ? கண்கொண்ட பூதலமெலாம் சன்மார்க்கம் கலந்து கொண்டாய்! பண்கொண்ட பாடலில் உன் பாட்டையே பாடிப் பரகின்றார். இன்றுமுதல் என்றென்றும் என்னையே நீ! பாடுக! என்னோடு கலந்து ஆடுக!" என்று அருட்செல்வியின் கை பிடித்தார் அவர்.

மாட்சி அளிக்கும் சன்மார்க்க மரபில் மனத்தை செலுத்திய அருள் நங்கை கணவர் திருவார்த்தை கேட்டதும் அவள் உள்ளத்தில் ஒரு கோடி இன்பம் பெருக்கெடுத் தோடியது. "அந்தோ! இது அதிசயம்! அதிசயம்! என்புகல்வேன்; அறிவறியாச் சிறியாளை அறிவறியச் செய்த அருளுடைய பரம் பொருளே! மன்றில் இன்ப நடம் புரிகின்ற மணவாளா!

ஆடகப் பொற்சபை நடுவே நாடகம் செய்தருளும் தாங்கள் இந்த ஏழையின்பால் கருணை வைத்து சித்தர்கள் தம் தனிச் சூதும் காட்டி; சாகாத நிலை காட்டியதோடு; என் கண்ணில் கருத்தில்; என் பண்ணில் பாட்டில் என் எண்ணில் எழுத்தில் இரண்டறக் கலந்து விட்டீர்கள். இனியும் என்னை கை விடவும் துணிவீரோ? பன்னிரெண்டாண்டு தொடங்கி இன்று பகலில் வரையுமே இந்த படியில் பட்ட பாட்டை நினைக்கில் மலையும் கரையுமே.

''அன்றே யென்னை யடிய னாக்கி யாண்ட ஜோதியே
யதன்பின் பிள்ளையாக்கி யருளிங் களித்த ஜோதியே
நன்றே மீட்டு நேம னாக்கி நயந்த ஜோதியே
நானும்நீயு மொன்றென் றுறைத்து நல்கு ஜோதியே.''

தேன்பாடல் அன்புடையார் செயப் பொதுவில் நடிக்கின்ற சிவமே! ஞான சபைதன்னில் ஆடும் தெய்வமே! உன் புகழை நான் பாட நீ! திருத்த என்ன தவஞ் செய்தேனோ எந்தாய்?'' என்று தியாகப்பெருமான் திருவடியைப் பற்றிய வண்ணம் பாடுகிறாள் அருட்குயில்.

''அஞ்செழுத் தோதி யுய்ந்திடாப் பிழையை
ஐய நின்திருவுளத் தெண்ணி
வெஞ்சனென் றையோ கைவிடிற் சிவனே
வேறு நான் யாதுசெய் வேனே
கஞ்சன் மான் முதலோர் உயிர்பெற வித்தைக்
களத்திருத்திய வருட் கடலே
சஞ்சித மறுக்குஞ் சண்முக முடையோன்
தந்தையே யொற்றியெந் தவமே.''

மாதர் மணியே!

தண்டமிழ் கவிதைபோல சாந்தமிக்க தன் மகளைக் காணாது கண்ணீரும்; கம்பலையுமாக திரு ஒற்றியூரை நாடி அதோ! வருகிறாள் அந்த செவிலித்தாய். ஐயோ

பாவம்! மக்களை பெற்றவர்கள் கண்டு களிக்கும்காட்சி அந்த திருமணக்காட்சி ஒன்று தானே? அதையும் காண முடியாது எந்த பாவிகளோ என் கண்ணின் சிறு ஒளியை எனக்குத் தெரியாது கொண்டுபோய் விட்டார்களே? என்று ஏங்கியவள் உள்ளத்திலே அருவியைப்போல ஆனந்த வெள்ளம் பொங்கித் ததும்பியது. திரு ஒற்றியூர் தியாகப்பெருமான் அருகில் தன் மகளைக் கண்டதும் அவளுக்குத்தான் எத்தனை கோடி இன்பம்! அவள் கண்களை அவளால் நம்பவே முடியவில்லை. எங்கையே ஒரு புதிய உலகத்தில் இருப்பதுபோன்று எண்ணியவள் அடியற்ற மரம்போல; விழுந்து கடலனைய பேரின்பம் துளும்ப குழைந்து குழைந்து பேசினாள்: —

அளவை யெல்லாம் கடந்து, மனங்கடந்து, மற்றை அறிவையெலாம் கடந்து அமலயோகர் உளவையெலாம் கடந்து; அண்ட பிண்ட மெலாம் கடந்துநின்று பார்த்தாலும் பார்க்க முடியாத பரம்பொருளே! அன்பர் வளவையெலாம் இருளகற்றும் ஒளியே! மோன வாழ்வே! இதோ! தங்கள் அருகில் அமர்ந்திருக்கும் என் அருங்கலச் செல்வியைக் கண்டு மட்டிலாத மகிழ்ச்சி அடைகின்றேன்; இதுவரை என் உயிரினும் மேலாய் மதித்து வந்த ஒன்றை இப்பொழுது உங்களிடம் ஒப்படைக்கின்றேன். இனி அவளுக்கு தந்தையும், தாயும் அவள் போற்றும் சாமியும், பூமியும் சொந்த நல்வாழ்வும் எல்லாமே நீங்கள் தான்.

மறப்பற்ற நெஞ்சிடை வாழ்கின்ற வள்ளலே! மலப் பற்று அறுத்தவர் வாழ்த்தும் மணாளரே! சிறப்புற்ற மங்கையர் தம்மோடு திருஒற்றியூர் திருவிழாவைப் பார்க்க என் மகள் அன்றொருநாள் வந்தபோது; அவள்

உள்ளத்தைகொள்ளைகொண்டு விட்டீர்களாம். ஆனால் என் மகளோ உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாத உத்தமர். மரபிலே வந்தவள்; பட்டம் பதவியில் ஆசையில்லாது உங்களை அடைவதே வாழ்க்கையின் ஒரு புனித நாள் என எண்ணியவள்.

அவளையும் அறியாது ஏதேனும் குற்றம் குறைகள் இருந்தாலும் நீங்கள்தான் குணமாகக் கொள்ளல் வேண்டும். அன்னையினும் பெரிதினிய கருணை ஊட்டும் ஆரமுதே! என் மகளுக்கு உலகை அறியும் அறிவு இல்லை. ஆனால் உங்களை அறிந்து கொள்ளும் பேரறிவு உண்டு.

அவளுடைய உள்ளமோ அனுச்சம் பூவைவிட மென்மையானது. ஒரு முறை வாடிய பயிரைக் கண்ட போது ஐயோ! என வாடி வருந்தினாள். கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே நடந்தாள். வையமேற் பிறர்தம் கோலமும், நடையும் வண்ணமும் சிறிதும் ஊன்றிப் பார்ப்பதே இல்லை. மெலியரை வலியார் அடித்தபோதெல்லாம் அவள் படுகின்ற துன் பத்தை தெளிய நான் உரைக்க வல்லவள் அல்ல; பித்தெலாம் உடைய உலகர்தம் கலகப் பிதற்றெலாம் என்று ஒழிந்திடுமோ; சத்தெலாம் ஒன்று என்று உணர்ந்த சன்மார்க்கம் என்று ஓங்குமோ என்று அடிக் கடி உங்களிடம் அவளே உரைத்தும் நீங்கள் அறிந்ததே. அவள் கண் கலங்காதவாறு காத்து வந்தால் அதுவே எனக்கு நீங்கள் செய்யும் கைமாறாகும்.

அழகினால் உண்டாகும் காதல் ஒரு பூவைப் போன்றது எப்பொழுதேனும் வாடிப்போகும். பணத்தி னால் உண்டாகும் காதல் ஒரு கண்ணாடியைப் போன்றது

எந்த நிமிடம் உடையும் என்று சொல்ல முடியாது. அன்பினுல் உண்டாகும் காதல்தான் தெய்வீகக் காதல் அதை யாரும் அழிக்கவோ, அசைக்கவோ முடியாது என்று உலகில் பேசுவதுண்டு; ஆகையால் உங்கள் திருக்கரம் நான் வளர்த்தெடுத்த செல்வத்தின் மணித் தோளை விட்டு நெகிழா திருக்கட்டும்! எப்பாரும் எப்பதமும் அவள் எங்கு சென்றபோதும் உனது புகழையே இயம்பியிடல் வேண்டும். நான் தப்பேது செய்திடினும் நீ! பொருத்தருளல் வேண்டும் தலைவா!'' என்று கடவுளாகிய தலைவரோடு கலந்திருக்கும் ஆன்ம சிற்சத்தியாகிய தலைவிக்கு இதோ! நல்லாசி கூறுகிருள் செவிலித்தாய். இல்லை யில்லை முன்னம் அந்த அன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச் சிந்தி கண்ணமுங் கிள்ளிய அன்புக் கரங்களாலே; தன் கண்மணிக்கு திலகமிட்ட வண்ணம் பண் பாடுகிருள்.

''மாதர் மணியே மகளே நீ வாய்த்த
தவந்தான் யாதறியேன்
வேதர் அனந்தர் மாலனந்தர் மேவி
வணங்கக் காண்பரியார்
நாதர் நடன நாயகனுர் நல்லோ
ருளத்து நண்ணுகின் ருேர்
கோதர் அறியாத் தியாகர் தமைக்
கூடியுடங் குளிர்ந்தனையே.''

அருளாட்சி

அன்று அவள் திருமணந்தின்போது விதவிதமான விளக்குகள் ஒளிவீசவில்லை. வகை வகையான வாத்தியங்கள் வானழாவி முழங்கவில்லை. அவ்வூரில் உள்ள நாலுபெரிய மனிதர்கள்வந்து நல்லிதழ் வாசிக்கவில்லை. ஆனுலும் தான் பிறந்ததின் பயன் யாரை அடைய

வேண்டுமோ அதை அடைந்த அருட் தலைவி; மெய்யுணர்ந்த வாதவூர் மலையை சுத்த வெளியாய் கலந்து கொண்ட அருட் தலைவன் திருவடியில் நின்று கனிந்த உள்ளத்தோடு ; விண்ணப்பம் செய்கின்ற அழகே! அழகு.

எல்லாம் உடைய அருட்பெருஞ் ஜோதி அற்புதக் கடவுளே ! நாடு கலந்து ஆழ்கின்ருேர் எல்லாரும் வியப்ப நண்ணி என்னை மாலையிட்ட நாயகனே ! நாட்டில் ஈடு கரைந்திடற்கறிதாம் திருஒற்றியூரிலே இன்ப நடம் புரிகின்ற இறையவனே! நான் கோடு தவருது உன்னையே பாடுவதற்கு ஏற்ற குணப் பொருளும், இலக்கணமும் கொடுத்த அருட்குருவே! விளக்கறியா இருட்டறையில் கவிழ்த்து கிடந்தழுத சிறியாளுக்கு அருட்ஜோதி மகுடம் சூட்டி; தன்கையில் உள்ள செங்கோலை என் கையில் கொடுத்த இறைவா ! கல்வியெலாம் கற்பித்தாய், நின்பால் நேயம் காண வைத்தாய், இவ்வுலகம் கானல் என்றே ஒல்லும் வகை அறிவித்தாய், என் உள்ளே நின்று நின்னருளும் உதவுகின்ருய், இல்லை யெனப் பிறர்பால் சென்று இரவா வண்ணம் ஏற்றம் அளித்தாய்; நின் இரக்கம் என்னே! சின்னஞ் சிறு வயதில் என்னை ஆட்கொண்ட தெய்வமே! அதோ! புதியதொரு சகாப்தம்—கருணை அருட்ஜோதி உதயமாவதைப் பாருங்கள்! இதுவரை மனிதனை ஒரே குலம்; ஒரே சாமி, ஒரே இனமாக வாழவிடாது தலை விரித்தாடி வந்த சாதி வெறி! மதவெறி! சமயவெறிகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பரந்து போவதோடு; பாலைவனம் சோலைவனமாவதையும், பசுங்கிளிகள் அங்கிருந்து பாடுவதையும் ஓங்கு நிலா மண்டபத்தே இருந்து பார்ப்போம் வாருங்கள் !

"பாம்பெலா மோடின பறவையுட் சார்ந்தன
தீம்பெலா வாழைமாத் தென்னை சிறந்தன
ஆம்பல மென்மேலு மாயின வென்னுளத்
தோம்லென் னருட் பெருஞ் ஜோதியாரோங்கவே."

ஆதியீறறியா அருளரசாட்சியிற் சோதிமா மகுடம் சூட்டிய தந்தையே! நின்றனக்கு கைமாறு ஏது கொடுப்பேன்.

''மாட்சி அளிக்கும் சன்மார்க்க மரபில்
மனத்தை செலுத்துதற்கு ஓர்
சூட்சி அறியாது உழன்றேனைச்
சூட்சி அறிவித்து அருளரசின்
ஆட்சி அடைவித்து அருட்ஜோதி
அமுது அளித்தே ஆனந்தக்
காட்சி கொடுத்தாய் நின்றனக்கு
கைம் மாறு ஏது கொடுப்பேனே.''

''மாலிலே மயங்கி மண்ணிலே யநித்த
வாழ்விலே வரவிலே மலஞ்சார்
தோலிலே யாசை வைத்து வீண் பொழு
துதொலைக்கின்றோர் தொலைக்க நானுனது
காலிலே யாசை வைத்தன னீயுங்
கனவினு கனவினு மெனை நின்
பாலிலே வைத்தா யெனக்கிது போதும்
பண்ணிய தவம் பலித்ததுவே.''

நான் பசித்த போதெல்லாம் தான் பசித்ததாகி நல்லுணவு அளித்த நாதா ? கொல்லா நெறியே குருவருள் நெறியெனப் பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச் சிவமே! நீ! யுரைத்த திருவார்த்தைகளை எல்லாம் என்னுரை,

என்று இந்த உலகத்தார் பேசுகின்றூர்கள் ஐயோ பாவம்! இவர்கள் அறிவையும், ஆராய்ச்சியையும் நினைத்தால் எனக்கே வியப்பாகத்தான் இருக்கின்றது.

"ஆயுரைத்த அருட்ஜோதி வருகின்ற தருணமிதே
[யறிமி னென்றே
வாயுரைத்த வார்த்தைகளென் வார்த்தை களென்கின்றூரிம்
[மனிரந்தோ
தாயுரைத்த திருப்பொதுவினிடம் புரிந்தென் னுளங் கலந்த
[தலைவா விங்கே
நீயுரைத்த திருவார்த்தை யெனவறியா ரிவரறிவினிகழ்ச்சி
[என்னே."

என்று தம்மைமறந்து அருளமுதம் உண்டு தேக்கும் தகையுடையார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த அருள் நங்கை திருஅருட்பா பாடவும், பற்றறியா முத்தர்தமை எல்லாம் வாழைப்பழம் போல விழுங்கின்ற திருஒற்றியூர் தியாகப் பெருமான் ஆடவும், தப்பிலா மன்றில் தனிக்கூத்து கண்டபின் ஒப்பில் எழுகோடியுகம் இருந்தாள்.

வாழ்க ! சன்மார்க்கம் ! வளர்க ! அருட்பா நெறி !

புதுக்கோட்டை **R. சீனிவாசன்** எழுதிய நூல்கள்

சிற்பியின் மகள்	0—8—0
அருளரசி	0—8—0
வள்ளலார் ஒற்றியிலே ஒரு நாள்	0—8—0
வள்ளலார் நினைவுகள்	0—8—0
வள்ளலார் கண்ட ஒரு சிறுவன்	0—8—0
சாதிமத சழக்கும் சன்மார்க்க வழக்கும்	0—8—0

சமரச சுத்தசன்மார்க்க சங்கம்
8/99, அம்மன் கோவில் தெரு, சென்னை-1.

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை-1.